# அரபு அகதிகளுக்கு உதவி தேவை; இல்லையேல் 10 லட்சம் பேர் பட்டினி

Registered as a Newspaper in Ceylon வாரமலர் ★★ விலை சதம் 20

பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை
உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்
47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.

# ஈழநாடு




மலர் 9 | பிலவங்க ஆனி 8 | ரபி அவ். 13 | (22—6—67) | வியாழக்கிழமை | இதழ் 131

நியுயோர்க், ஜூன் 21

மேற்கு ஆசிய யுத்தத்தின் விளைவாக அகதிகளாகியுள்ள அரபு மக்களுக்கு நிவாரண உதவி அளிப்பதற்கு ஐ. நா. வில் அங்கத்துவம்வகிக்கும் பன்னிரண்டு நாடுகள் முப்பது லட்சம் டாலர் உதவியளித்திருப்பதாக ஐ. நா. நிவாரண உதவிக் குழு தெரிவித்தது,

ஆனல் இந்த உதவி போதாதென்றும் இன்னும் அதிக உதவி தேவையென்றும் அந்தக் குழு கோரியுள்ளது. மேலும் உதவி கிடைக்காவிட்டால் பத்து லட்சம் அரபு அகதிகள் இன்னும் மூன்று வாரங்களில் உணவின்றிப் பட்டினி கிடக்க நேரிடுமென்றும் நிவாரண உதவிக் குழு தெரிவித்திருக்கிறது.

ஜோர்டானில்மட்டும் ஒரு லட்சம்பேர் அகதிகளாகியிருக்கின்றனர் என்று ஓர் அதிகாரி தெரிவித்தார்.

# தமிழ் தெரிந்த பொலிசாரே வடபகுதிக்கு வேண்டும்

## பொலிஸ் அதிபருக்கு யாழ். சுப்ரின்டன்ட் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணப் பகுதிக்கு தமிழ் தெரிந்த பொலிஸ் ஊழியர்களை அனுப்பிவைக்குமாறு வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபயகுணவர்த்தனவுக்கு ஓர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றும் பொலிஸ் ஊழியர்களில் அனேகமானவர்கள் சிங்கள ஊழியர்களாகவே யிருக்கின்றனர்கள். இதனல் தமிழ் மக்கள் மத்தியில் விசாரணைகள் செய்யவும் பொலிஸ் நிலையத்தில் புகார்களைப் பதிவு செய்யவும் சிங்களப் பொலிசாரே கடமையாற்ற வேண்டியுள்ளது. இந்த நிலையில் தமிழ் மாத்திரம் தெரிந்த பொதுமக்களின் புகார்களையும், விசாரணைகளையும் தமிழ் தெரியாத சிங்களப் பொலிசாரால் சரியாகப்பதிவு செய்ய முடியாதிருக்கின்றதாகப்பலர் என்னிடம்புகார் செய்துள்ளனர். புகார்களைச் சரியானமுறையில் பதிவு செய்யாததால் அண்மையில் பலவழக்குகள்கூட நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. ஆதலால் உடனடியாகக் குறைந்தது 25 தமிழ் தெரிந்த பொலிஸ் ஊழியரையாவது யாழ்ப்பாணப்பகுதிக்கு அனுப்பிவைக்கும்படி வேண்டுகிறேன்'' என்று திரு. சுந்தரலிங்கம் பொலிஸ் அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

## 'பாரத நாட்டின் பணிக்கு அர்ப்பணித்த ஈழப்புதல்வர்'

### டாக்டர் அரியநாயகத்துக்கு இறுதி அஞ்சலி

யாழ்ப்பாணம், வியாழன்

''பாரதநாடு அனைத்தின், தெற்கு, வடக்கு, மேற்கு, கிழக்கு எல்லாப்பகுதி மக்கள் அன்பையும் மதிப்பையும் பெரிதும் பெற்றிருந்தார். ஈழ அன்னையின் சிறந்த புதல்வர் டாக்டர் ஈ. டபிள்யூ. அரியநாயகம் அவர்கள். அவரும் அவரது அருமை மனைவியார் ஆஷா தேவியும், கல்விக்காகவும், நாட்டு மக்களின் சர்வோதயப் பணிக்காகவும் தங்கள் ஜீவியத்தையே தானமாக வழங்கினர். கவி அரசர் ரவீந்திரநாததாகூர், மகாத்மாகாந்தி, வினோபாபாவே, டாக்டர் ஸாஹிர் ஹூசேன், முதலியவர்களுடன் சேர்ந்து 40 ஆண்டுகளுக்குமேல் அரும்பெரும் [illegible] யின் புதல்வர், முடிவில் தமது பிறப்பிடமாகிய வட்டுக்கோட்டைக்கே வந்து, தலைசாய்த்தார். அப்பெருமகனின் [illegible] காட்டியாகும்.'' என்று திரு. நேசையா அவர்கள் வட்டுக்கோட்டையிலே காலஞ்சென்ற டாக்டர் அரியநாயகத்தின் ஈமக்கிரியையின்போது பேசுகையில் குறிப்பிட்டார். வண. பிஷப் குலேந்திரனும் காலஞ்சென்ற பெரியாரின் குணதிசயங்களைப் போற்றினர். கிறிஸ்தவ பக்திப்பாடல்கள் பாடப்பட்டன. ஏராளமான ஆண், பெண் பிரமுகர்கள் கூடி இறுதி அஞ்சலிசெலுத்தினர். ஸ்ரீமதி ஆஷாதேவி தூயவெள்ளைக்கதர் உடைதரித்து, துக்கமே உருவாகி மையப்பெட்டிக்குப் பக்கத்தில் பகவத்கீதை புத்தகத்துடன் தலை குனித்து அமர்ந்திருந்தார்.

பின்னர் அராலி மயானத்தில் அவரது உடல் தகனம் செய்யப்பட்டது. பிஷப் குலேந்திரன் சிதைக்கு தீ மூட்டினர். அஸ்தியைஸ்ரீமதி ஆஷாதேவி இந்தியாவுக்குக் [illegible]

### ஆசிரியர் கூட்டம

யாழ்ப்பாணம், வியாழன்

சுவீகரிக்கப்பட்ட தமிழ்ப் பாடசாலை ஆசிரிய சங்கத்தின் 1-வது பொதுக் கூட்டம் இன்று காலை ஆனைப்பந்தி உயர்கலை மன்றத்தில் நடைபெறுகிறது. யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

### நூல்வெளியீட்டுவிழா

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை திரு. ஏ. ரி. பொன்னுத்துரை எழுதிய 'இறுதிப்பரிசு' நாடகநூல் வெளியீட்டுவிழா காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. யாழ் இலக்கிய வட்டத்தின் ஆதரவில்இந்நூல்வெளியீட்டுவிழா நடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## காதலர் தற்கொலை

### தமிழ்பெண்ணும் சிங்களஇளைஞனும

இரத்தினபுரி, புதன்

பதினேழு வயது அழகுத் தமிழ் யுவதி லட்சுமி இருபது வயது சிங்கள இளைஞன் பொடிமஹத்மயாவை உயிருக்குயிராகக் காதலித்தாள். லட்சுமியின் தாயார் இந்தக் காதலை அனுமதிக்க மறுக்கவே, காதலர்கள் இருவரும் தற்கொலை ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டார்கள். அதை நிறைவேற்றியும்கொண்டார்கள்.

இந்தப் பரிதாபகரமான சம்பவம் அம்பிட்டிகண்ட தோட்டத்தில் நடந்துள்ளது.

இறந்த பெண்ணின் தாயார் வீரம்மா சாட்சியமளிக்கையில், 'எனது மகளுக்குக் கல்யாணம் நிச்சயித்திருந்தது. அதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. சம்பவதினம் எங்கள் தோட்டத்திலிருப்பவரான பொடிமஹத்மயா என்பவர் வீட்டுக்கு வந்தார். அவர் வருவதை நாம் அனுமதிக்கவில்லை. அன்று இரவு 7 மணிக்கு எனது மகள் கட்டிலில் படுத்திருந்து வாந்தியெடுப்பதைக் கண்டேன். பின்னர் அவர் இறந்துவிட்டார்' என்று கூறினர்.

இறந்த இளைஞனின் தகப்பனர் சாட்சியமளிக்கையில், இரவு 6-30 மணிக்கு மகன் கட்டிலில் படுத்துக்கொண்டு வாந்தியெடுத்தாரென்றும், பின்னர் இறந்துவிட்டாரென்றும் கூறினர்.

தனது காதலியின் வீட்டிலேயே கிருமிநாசினியை இருவரும் எடுத்துக்கொண்டிருக்கலாமென்று மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## ''வெளியார் முதலீட்டை இலங்கை வரவேற்கிறது''

### கனடாவில் இலங்கைப் பிரதமர்

ஒட்டாவா, ஜூன். 21

இலங்கைப்பிரதமர் திரு. டட்லி சேனநாயகா கனடா பிரதமர் திரு. லெஸ்டர் பியர்ஸனை ஒட்டாவாவில் [illegible] வார்த்தை நடத்தினர், இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தக உறவுகள் பற்றிப் பேசப்பட்டது. இலங்கையில் வெளியார் [illegible]

பத்திரிகை நிருபர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மத்திய கிழக்குப் பிரச்னை சம்பந்தமாக ஐ. நா. சபையின் நடவடிக்கைகளையே தாம் ஆதரிப்பதாக பிரதமர் டட்லி கூறினர்.

வியட்னும் குறித்துக்கேட்கப்பட்டபொழுது வியட்னும் மீது இலங்கை அதிகம் இரக்கப்படுவதாகவும், இரு [illegible]

## இந்திய விமானம் இறங்க சீனு மறுப்பு

### இந்தியாவும் அனுமதியை நிராகரித்தது

புதுடில்லி, ஜூன். 21, இறதென்று இந்தியா தெரி[illegible]

## கெய்ரோவில் சோவியத் ராணுவ அதிகாரிகள் பேசசு

### நாஸர்-ரஷ்ய அதிபர் ஆலோசனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குமேல் அரும்பெரும்
யின் புதல்வர், முடிவில் தமது பிறப்பிடமாகிய வட்டுக்கோட்டைக்கே வந்து, தலைசாய்த்தார். அப்பெருமகனின் தியாகவாழ்க்கை எல்லாருக்கும் மேலான வழி

பின்னர் அராலி மயானத்தில் அவரது உடல் தகனம் செய்யப்பட்டது. பிஷப் குலேந்திரன் சிதைக்கு தீமூட்டினார். அஸ்தியைஸ்ரீமதி ஆஷாதேவி இந்தியாவுக்குக் கொண்டு செல்லுவாரென்று தெரிகிறது.

## வடக்கில் கண்வங்கி

யாழ்ப்பாணம், வியாழன்

வடமாகாணத்துக்கான மத்திய கண் வங்கி ஒன்று வெகுவிரைவில் யாழ்ப்பாணப் பகுதியில் நிறுவப்படவிருக்கின்றது. இந்தக் கண்வங்கியை மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

சர்வதேச கண்வைத்திய நிபுணர்களும், இலங்கை கண் வைத்தியநிபுணர்களும் கூட்டாகச்சேர்ந்தே இந்தக் கண்வங்கியை அமைக்கவுள்ளனர். இந்தக் கண்வங்கி அமைக்கப்பட்டால் இது தற்போதுகொழும்பில்இருக்கும் கண்வங்கிக்கு இரண்டாவதாக இருக்குமென எதிர்பார்க்கப் படுகின்றது. இறந்தவர்களின் கண்களை எடுத்துப் பாதுகாத்தல், கண்பார்வை யில்லாதவர்களுக்கு கண்கள் வழங்குதல், சத்திரசிகிச்சைமூலம் கண்களுக்குப் பார்வைவழங்குதல் என்பன இந்தக் கண்வங்கி மூலம் செய்யப்படும்.

## இறங்க சீனு மறுப்பு

### இந்தியாவும் அனுமதியை நிராகரித்தது

புதுடில்லி, ஜூன். 21

சீனுவிலுள்ள இந்திய தூதரக அதிகாரிகளின் மனைவி, குழந்தைகளை இந்தியாவுக்கு ஏற்றி வருவதற்கு இந்திய விமானம் பீக்கிங் செல்வதற்கு சீன அரசாங்கம் அனுமதியளிக்கமறுத்ததைத் தொடர்ந்து புதுடில்லியிலுள்ள சீனத்தூதரக அதிகாரிகளை ஏற்றிச் செல்வதற்கு சீனவிமானம் புதுடில்லி வருவதற்கு இந்தியா முதலில் அளித்திருந்த அனுமதியை ரத்து செய்துள்ளது. எனினும் சீனு தனது முடிவை மாற்றிக் கொண்டால் இந்தியாவும் தனது முடிவை மாற்றி விமானத்துக்கு அனுமதியளிக்கத் தயாராகஇருக்கிறதென்று இந்தியா தெரிவித்திருக்கிறது.

பீக்கிங்கில் நான்கு தினங்களாக இந்தியத்தூதரகத்தினுள் செங்காவலரின் முற்றுகையினுல் உள்ளேயிருந்த தூதரக அதிகாரிகளின் குடும்பத்தினர் இன்று தூதரகத்தை விட்டு தங்கள் இடங்களுக்குச் சென்றனர்.

புதுடில்லியில் சீனத் தூதரக அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுதிட்டங்களும் இன்று நீக்கப்பட்டன.

## ஏடனில் கலகம்

ஏடனில் இன்று மீண்டும் கலகமும் கிளர்ச்சியும் ஏற்பட்டதில் பதினேழு பிரிட்டிஷ் இராணுவச் சிப்பாய்களும் இரு பிரிட்டிஷ் பொலிசாரும் கொல்லப்பட்டனர். பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகவும் பிரிட்டிஷ் அரசாங்க அதிகாரிகளுக் கெதிராகவும் அரபுமக்களின் கிளர்ச்சி நடைபெற்றது. கட்டிடத்துக்கும் தீவைக்கப்பட்டது.

## அணு விஷக்கதிர்

சீனு சமீபத்தில் பரீட்சித்த ஹைரட்ஜன் குண்டிலிருந்து வெளியான அணு விஷக்கதிர்இன்று வட அமெரிக்காவை அடைந்ததாக அமெரிக்கவானிலைஅவதான அதிகாரிகள் தெரிவித்தனர். சீனு ஹைட்ரஜன் குண்டை எப்படி வெடித்தது என்பது பற்றி அமெரிக்க. ஜப்பான் விஞ்ஞானிகள் மத்தியில் அபிப்பிராய பேதமுள்ளது.

## 500 பேர் மாண்டனர்

வியட்னுமில் சென்ற வாரம் வியட்காங்கியர் நடத்திய தாக்குதலில் மாண்டு, காயமடைந்த, காணுமல் போனவர் தொகை 500 என மதிப்பிடப்பட்டுள்ளது. திங்கட்கிழமையிலிருந்து இன்று வரை அமெரிக்கப்படைகள் நடத்திய தாக்குதலில் 200 வியட்காங்கியர் கொல்லப்பட்டனர். அமெரிக்கபோர் விமானங்கள் குண்டு வீசியதில் ரயில் நிலையங்கள் சேதமடைந்தன.

## பீக்கிங் வரவேற்பு

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் விஜயம் செய்தபின் இன்று பீக்கிங்போய்ச் சேர்ந்த ஸாம்பியா அதிபர் கென்னத் கௌண்டாவை சீனப்பிரதமர் சூஎன்லாய் விமானநிலையத்தில் வரவேற்ருர்.

## ராணுவ அதிகாரிகள் பேச்சு

### நாஸர்-ரஷ்ய அதிபர் ஆலோசனை

கெய்ரோ, ஜூன் 21

ஐக்கிய அரபுக் குடியரசு இராணுவ அதிகாரிகளுடன் சோவியத் இராணுவ அதிகாரிகள் இன்று இங்கு பேச்சுவார்த்தை ஆரம்பித்தனர். அரபுக் குடியரசுக்கு சோவியத் நவீன ஆயுதங்கள் வழங்குவதுபற்றி இப்பேச்சு நடைபெறுகிறதாகக்கூறப்படுகிறது.

சோவியத் அதிபர் பொட்கொர்ணி இன்று பெல்கிரேடிலிருந்து ஐக்கிய அரபு குடியரசு தலைநகரான கெய்ரோவுக்கு வந்து சேர்ந்தார். பெல்கிரேடில் யூகோஸ்லேவிய அதிபர்மார்ஷல் டிட்டோவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய அதிபர் பொட்கொர்ணி கெய்ரோவில் அதிபர் நாஸருடன் பேச்சுவார்த்தை நடத்திஞர். இதற்கு முன்னதாக, நேற்றே சோவியத் தளபதி ஸக்கரோவ் கெய்ரோ வந்துசேர்ந்துள்ளார். அவரும் இப்பேச்சு வார்த்தையில் கலந்துகொள்ளவிருக்கிருர்.

### கொஸிஜின் - சாக்ளா சந்திப்பு

ஐ. நா. மகாசபையின் அவசரக் கூட்டத்தில் கலந்துகொண்ட சோவியத் பிரதமர் கொஸிஜினை இந்திய வெளிவிவகார மந்திரி சாக்ளா நேற்று சந்தித்துப் பேசினுர். இதற்கு முன்னதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் திரு. டீன்றஸ்க்கை திரு. சாக்ளா சந்தித்துப் பேசினுர்.

வார்த்தை நடத்தினுர், இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தக உறவுகள் பற்றிப் பேசப்பட்டது. இலங்கையில் வெளியார் மூலதனமிடுவதைத் தாம் வரவேற்பதாக பிரதமர் டட்லி கூறினுர்.

ஒட்டாவா நகரமேயர் பிரதமர் டட்லி சேனநாயகாவுக்கு மதியபோசனவிருந்தளித்துக் கௌரவித்தார். கனடா கவர்னரையும் பிரதமர் டட்லி சந்தித்தார்.

களையே தாம் ஆதரிப்பதாக பிரதமர் டட்லி கூறினுர்.

வியட்னும் குறித்துக்கேட்கப்பட்டபொழுது வியட்னும் மீது இலங்கை அதிகம் இரக்கப்படுவதாகவும், இரு நாடுகளும் பௌத்தநாடுகளென்பதால் வியட்னும் மீது இலங்கைக்கு அக்கறையுண்டென்றும் பிரதமர் திரு. டட்லி கூறினுர்.

இங்கு நடைபெறும் எக்ஸ்போ கண்காட்சியையும் திரு. டட்லிசேனநாயகா பார்வையிட்டார்.

## இ.போ.ச. ஊழியர் கண்ணியத்துடன் நடந்து கொள்ள வேண்டும்

### முகாமையாளருக்கு பட்டினசபைதலைவர்கடிதம்

சங்கானை, புதன்

''இ. போ. ச. ஊழியர்கள் பொதுமக்களின் சேவகர்கள் என்பதையும் அவர்கள் பிரயாணிகளிடம் கண்ணியத்துடனும் கடமை உணர்வுடனும் நடந்து கொள்ளவேண்டுமென்பதையும் உணரவேண்டும்.''

இவ்வாறு சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. சி. க. திருச்சிற்றம்பலம் 19-6-67 காலை 10-30 மணிக்குப் புகார் செய்யச்சென்ற ஒரு பிரயாணி வலி-மேற்கு பஸ் நிலையப் பொறுப்பாளரால் அவமதிக்கப்பட்டது சம்பந்தமாக இ. போ. ச. பிராந்திய முகாமையாளருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## பொலிசார் அன்னதானம்

யாழ்ப்பாணம், வியாழன்

காங்கேசன்துறை பொலிசார்நோயாளிகளுக்கு இன்று மதிய உணவு வழங்குகிருர்கள். காங்கேசன்துறை ஆஸ்பத்திரியிலுள்ள 180நோயாளிகளுக்கு போசன்பண்டிகையையொட்டி இன்று இந்தத் தானத்தை அளிக்கிருர்கள்.

## தாத்தா ஜோன்சன்

அமெரிக்க அதிபர் ஜோன்சனின் 19 வயதுமகள் லூஸி இன்று ஒரு ஆண் குழந்தையைப் பிரசவித்தார். 8 ருத்தல் 10 அவுன்ஸ் எடையுள்ள அந்தக்குழந்தை 'அழகாக' இருக்கிறதாம்.

## "அண்ணலின் போதனையை மறந்ததே அரபியரின் தோல்வி"

### யாழ். மீலாத் விழாவில் குவாஸி சுல்தான்

யாழ்ப்பாணம், வியாழன்

''உலகம் அஞ்ஞானத்தில் அமிழ்ந்து. அழிவுப் பாதையை நோக்கிச்சென்று கொண்டிருந்த நேரத்தில் ஞானவழிக்குத் திருப்பிய அண்ணல் நபி [ஸல்] அவர்களின் போதனையைக் கைவிட்டு உண்மையான இஸ்லாத்திலிருந்து வழுவிய காரணத்திஞலேயே பெரிய அரபுநாடுகள் இன்று சிறிய இஸ்ரேல்நாட்டிடம் தோல்விடைந்தன. இது அவர்களுக்கு இறைவன் படிப்பித்த ஒரு பாடமாகும். அராபிய நாடுகளின் தோல்வியானது உலக இஸ்லாம் மக்களின் தோல்வியாகும்.''

நேற்று மாலை யாழ்ப்பாணம் ஐந்து சந்தி மீலாத் கொமிட்டியினுல் ஒழுங்கு செய்யப்பட்ட அண்ணல்நபி [ஸல்] அவர்களின் அவதார தின விழாவுக்குத் தலைமை வகித்த குவாஸி எம்.எம். சுல்தான் தமது தலைமை உரையில் மேற்கண்டவாறு கூறினுர்.

மின்சாரப் பல்புகளால் அலங்கரிக்கப்பட்ட அலங்காரப் பந்தலில், நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் மத்தியில் அவர் தொடர்ந்து பேசுகையில், குறிப்பிட்டதாவது:-

அராபிய-இஸ்ரேல்யுத்தத்தில் உலக இஸ்லாம் மக்கள் அனைவரும் அராபிய நாடுகள் வெல்லவேண்டும் என்றே ஆவலுடன் இருந்தனர். ஆனுல் அவர்கள் அண்ணலின் அறவழிகளில் இருந்து நீங்கிய காரணத்திஞல் தோல்வியடைந்துவிட்டனர். எனவே அவர்களை மன்னித்து மீண்டும் அவர்கள் இழந்த இடங்களைப் பெற அருள் செய்யவேண்டும் என்று நாம் இறைவனைப் பிரார்த்திப்போம். எமது ஞானமறையாகிய திருக்குர் ஆனில் அரிய பல அறிவுப் பொக்கிஷங்கள் இருக்கின்றன. அந்த அறிவுப் பொக்கிஷங்களை நாம் படித்து செயலிலும் நடந்து காட்டவேண்டும். அப்பொழுதுதான் இப்பொழுது இஸ்லாம் மக்களிடையே இருக்கும் பிரச்னைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் தீர்வு காண முடியும். வருடத்தில் ஒருதரமாவது அண்ணலின் உபந்நியாசங்களையும், அவரது அறநெறிகளையும் ஒரு முஸ்லிம் ஒரு சில விநாடிகளுக்காவது சிந்திக்கவைக்க வேண்டும் என்ற ஒரு நம்பிக்கையினுலேயே அண்ணலின் அவதார தினத்தை உலக மக்கள் சிறப்பாகக் கொண்டாடுகிருர்கள். நாமனைவரும் அவரின் போதனைகளின்படி நடந்து முறையான உண்மை முஸ்லிம்களாகத் திகழ்வோமாக.''

மற்றும் உஸ்மானியாக் கல்லூரி அதிபர் திரு. எம். ஏ. குத்தூஸ், மௌலவி ஏ. எம். அபுல்ஹசன் ஆகியோரும் பேசினர்.

## காஸியஸ் கிளேக்கு ஐந்து வருடச் சிறை

கௌஸ்டன், ஜூன், 21

முன்னுள் அதிபாரக் குத்துச் சண்டை சாம்பியன் முகமதலி காஸியஸ்கிளேக்கு ஐந்துவருடச் சிறைத் தண்டனையும், பத்தாயிரம் டாலர் அபராதமும் விதிக்கப்பட்டது.


அருந்துங்கள்!




பால்
சபையின்
நீண்டகாலம்
பாவிக்கக்கூடிய
பால்
குளிர்ச்சியூட்டத்
தேவையற்ற
பால்

யாழ்ப்பாணத்தில் எங்கும் கிடைக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் மறக்காத கவிஞன் — XII

# கங்கைக் கரையில் கவிஞர்

சு. சண்முகம் எம். ஏ.

தான்பிறந்த குலத்தின் சம்பிரதாயச் சடங்குகள், ஆங்கிலேயர் நுழைவால் தன் தந்தை காலத்திலேயே சில பழைய மரபுகள் உடைபட்டுப் போய்ப் புதியதாகத் தோன்றிய பழக்கவழக்கங்கள், எதைப்பற்றியும் கவலைப் படாது, ஏழ்மையை ஏற்றுக்கொண்ட மக்களினம் -ஏனிப்படி வாழவேண்டுமெனச் சிந்திக்கத்தொடங்கிவிட்ட அறிஞர் கூட்டம்; இப்படி இருவேறு முரணான நிலைகளை ஒப்பிட்டுப் பார்த்த கவிஞர் ''நமக்குத் தொழில் கவிதை; நாட்டுக்குழைத்தல்; இமைப்பொழுதும் சோராதிருத்தல்'' என்ற முடிவுக்கு வந்த சூழலும் இதுவேயாம். தனதுகவிதைகள், நாட்டுமக்கள்நலனுற்று வாழ்வதற்கான வழிவகைகளைக் காட்டவேண்டும் என்ற நல்லுணர்ச்சியைக் கவிஞர் பெற்ற திருப்பத்திற்குஅவரது காசிவாழ்க்கை காரணமாயிருந்தது என்பதை நாம் மறத்தல் கூடாது.

இச்சந்தர்ப்பத்தில், காசியில் எதிர் வீட்டில் இருந்தவரும், பாரதிக்கு நண்பருமான பண்டிட் எஸ். நாராயணய்யங்கார், பாரதியின் காசி வாழ்வு பற்றிக் குறிப்பிடுவதும் சிந்திக்கத்தக்கது.

''சுப்பையா மிக்கவறுமையில் ஆழ்ந்திருந்தார். ராஜீய விஷயங்களில் எவ்வித சம்பந்தமும் அப்போது அவருக்குக் கிடையாது. சுப்பையா அரசியல் விஷயத்திலகொஞ்சமும் அறிவு இல்லாமலே இருந்து வந்தது எனக்கு வியப்பைத் தந்தது. அக்காலத்தில் காசியில் தங்கியிருந்த அன்னிபெசன்ட் அம்மையாருடனும் சர்ச்சை செய்யப்போவார். அம்மையாரின் பதில்களில் திருப்தி கொள்ளாமல் அவர் தம் அறிவைக் கேலிசெய்வார்.''

''காசியில் அவர் கடைசியாக ஒருபள்ளியில் ஆசிரியர் பதவியேற்று மாதம் 20 ரூபாய் சம்பாதித்துவந்தார். அக்காலத்தில் அவருக்குத் தமிழிலக்கியம் தெரியுமென்றோ, கவிபாடும்திறமை பெற்றவர் என்றோ, நான் நினைக்கச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. கையில் எப்போதும் ஷெல்லியின் ஆங்கிலக் கவிதைப் புத்தகத்தை வைத்துக் கொண்டு படிப்பார். ஓய்வுநேரங்களில் கங்கைக் கரையில் படிக்கட்டில் உட்கார்ந்து ஷெல்லியின் பாடல்களைப்படித்து அர்த்தம் சொல்லுவார். வடமொழியில் அவருக்குப் பயிற்சி அங்கே. ஆனல், வடமொழிக்கவிகளின் அர்த்தத்தைக் கேட்டு ரசிப்பதில் நிகரற்றவர்.

''காசியில் சரஸ்வதிபூஜையன்று பாரதி ஒரு கூட்டம் கூட்டி 'பெண்கல்வி' என்பது பற்றித் தமிழில் பேசினர். பெண்கள் கல்வியின்றித் தேசம் முன்னுக்குவராதென்று அடித்தும் பேசினராம். பெண்களின் சமத்துவத்தைப் பற்றி அடிக்கடி வற்புறுத்திப்பேசுவது அவர் பழக்கம். பெண்கள் கல்வி, சமத்துவம் இந்த இரு விஷயங்களைத்தவிர, அப்போது வேறு எதிலும் அவர் அதிக கவனம் செலுத்தவில்லை''. [3]

நாராயண அய்யங்கார் அவர்களின் கூற்றில் சில பொருந்துவன; சில பொருந்தாதன. பாரதி அரசியலில் அப்போது தீவிரவாதியாக செயல்படாதிருக்கலாம். ஆனல் அரசியல் நாட்டமே அவருக்கு அடியோடு இல்லை எனில் பொருந்தாது. அன்னிபெசன்ட் அம்மையாரோடு பாரதி கொண்ட கருத்து வேற்றுமையையே அய்யங்கார் கூற்று புலப்படுத்துகிறது. சரஸ்வதி பூஜையைப் புதுமுறையில் வழிபடும் பழக்கத்தைக் காசியிலேயே பாரதி தொடங்கிய குறிப்பும், அவர் ஷெல்லியின்மேல் கொண்டஈடுபாடும் அய்யங்கார் சொற்களால் வலியுறுகின்றன. பாரதி, பெண்கள் முன்னேற்றத்தில் கொண்டிருந்த ஈடுபாடொன்றே. அவர் அப்போதே பல தீவிரக் கருத்துக்களை அகத்தில் கொண்டு இருந்ததைப்புலப்படுத்துகிறது.

பாரதியைக் கவிஞராக அய்யங்கார் கண்டுகொள்ள முடியாமை, அவருக்கு வாய்ப்பின்மையேயொழிய பாரதி அப்போதே கவிஞராகத் திகழ்ந்தார் என்பதற்குத் தடையில்லை. பாரதிக்கு வடமொழிப்புலமைஅவ்வளவாக இல்லையென்று அய்யங்கார் கூறுவதும் பொருந்தவில்லை. காசியிலிருந்தபோது தான் வடமொழி, இந்தி, உருது, வங்காளம் போன்ற பல மொழிகளையும் அவர் பயின்றிருக்கவேண்டும். பாரதியின் வாழ்வில் பின்னர் எந்தச்சூழலிலும் இத்தகைய ஒய்வும், மொழிகற்கும் வாய்ப்பும் அவருக்கு ஏற்பட்டதில்லை; காசியில் பல மொழிகளைக் கற்றதின் அடிப்படையே, புது வையில், பகவத்கீதையையும், பதஞ்சலி சூத்திரத்தையும் மொழிபெயர்க்கும் திறனை அவருக்குத் தந்திருக்கவேண்டும்.

வட இந்தியத் தலைவர்களான தீவிரவாதிகளின் கொள்கைகளையும், பேச்சுக்களையும் அவர்கள் மொழியிலேயே அறிந்துகொள்ள வேண்டுமென்ற கருத்தில், கவிஞர் இந்தி, வங்காளம், உருது முதலிய மொழிகளையும் தீவிரமாகக் காசியில் கற்றுத் தெளிந்தார் என்பதும் பொருந்தும். [4]

இதுசமயம் பாரதியின் மனைவியின் தமக்கை கணவர் விசுவநாதன் என்பவர் காசிக்கு வந்து கடையம் திரும்பினர். காசியில் கண்ட பாரதியின் அரசியல் நடவடிக்கைகள் அவருக்கு அச்சத்தைத் தந்தது. திரும்ப அவர் ஊருக்குச் சென்றபோது தனது எண்ணத்தை உள்ளது உள்ளவாறே பாரதியின் மனைவியிடம் தெளிவுபடுத்திவிட்டார். அவர் கூறியது''அவனுக்கிருக்கும்தாய் நாட்டு அபிமானமும், சுதந்திரஆவலும் கட்டுக்கடங்காதவை அவை வெளியில் தெரிந்தால், அவன் சர்க்காரின் கோபத்திற்குஆளாகக்கூடும் என்று விஷயம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். அவன் பேசுவதைப்பார்த்தால், எல்லா இளைஞரையும் போலப் படித்து, நல்ல உத்தியோகம் வகித்துத் தன்மட்டில் சௌக்கியமாகக்குடும்பத்தாருடன் இருக்கவேண்டும் என்னும் எண்ணம் அவனுக்குஇருப்பதாகத் தெரியவில்லை.''

செய்தி கேட்ட செல்லம்மாள் மனங்கலங்கித் தன் கணவருக்குக் கடிதம் எழுதினர் [வளரும்]

# கே. பி. எச். எழுதும்

அன்புள்ள சரஸ்,

ஆங்கில தினசரியான ''ஸ்வராஜ்யா'' பத்திரிகையில் உதவி ஆசிரியரானதும் என்னைப் பற்றிய மதிப்பு பெரிதும் ''உயர்ந்து விட்டது'' எப்படித் தெரிந்தது தெரியுமா? எனக்குப் பெண் பேசவும்சிலர்முன்வந்ததால் தான்! 'தமிழ் நாடு', தமிழ் சுயராஜ்யா' பத்திரிகைகளில் வேலை பார்க்கையில் பேசாத வாய்கள்,இப்போது ஆங்கிலப் பத்திரிகையில் வேலைபார்க்கும் எனக்கு எப்படியாவது ஒரு கால் கட்டுப் போட்டுவிட முனைந்தன! தமிழர்கள்தான். ஆனல் அவர்களே தமிழ்ப்பத்திரிகைகளையும் அதில் சேவை செய்பவரையும் அவ்வளவாக மதிப்பதில்லை. ஆங்கிலமென்றல் பெருமதிப்பு! அன்று மட்டுமல்ல, இன்றும் கூட நம்மவர்களுக்கு அந்த மனப்பான்மை வெகுவாக மாறவில்லை. தமிழரே அவமதிப்பதாயின் தமிழ் எப்படி வளரும்? தமிழ்உயர்வதும் தாழ்வதும் தமிழர் கையில்தான் பெரிதும் உள்ளதேயன்றி பிறர்கையிலா இருக்கிறது?

உன் அப்பா ஆங்கிலத்தினசரியிலும் 'சப்எடிட்டராக' வேலை பார்த்தாரென்பது பற்றி நீ கூட ''பெருமை'' கொள்ளக்கூடும். ஆனல் உண்மையில் சொல்லுகிறேன். ஆங்கிலப்பத்திரிகை உதவி ஆசிரியரை விட, தமிழ்ப் பத்திரிகை உதவி ஆசிரியரின்வேலைதான் அதிக கஷ்டமானது செய்திகளெல்லாம் அநேகமாக ஆங்கிலத்தில்தான் கிடைக்கும். ஆங்கில உதவி ஆசிரியர். அச்செய்தியை 'பாரா' பிரித்து, அரைப்புள்ளி, முற்றுப் புள்ளிகள் போட்டு, உள்ளிருக்கும் சில கவர்ச்சியான சொற்களை எடுத்து தலைப்புக் கொடுப்பதுடன், அவர் வேலை முடிந்தது.

ஆனல் தமிழ்ப்பத்திரிகையின் உதவி ஆசிரியரோ,ஆங்கில மொழியில் கிடைக்கும் செய்திகளை, முதலில், தான் சரியாகப் புரிந்துகொண்டு, வாசகர்களுக்கு எளிதிலே புரியும்படியான தமிழில் மொழி பெயர்க்கவேண்டும். ஆங்கிலப்பத்திரிகைக்காரர், செய்தியை சரியாகப்புரிந்து கொள்ள வேண்டிய அவசியமுமில்லை. ஆனல் தமிழ்ப் பத்திரிகைக்காரரோ, செய்தியைப் புரிந்துகொண்டால் தான் வேலைபார்க்க முடியும். அவருக்குத்தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் நல்ல அறிவு இருக்க வேண்டும். என்றலும் ஆங்கிலபேப்பர்காரருக்குத்தான் அதிக ஊதியமும் மதிப்பும்! தமிழ் ஆசிரியர்களுக்கோ மிகக் குறைவு. இந்த வேற்றுமை, நாடு சுதந்திரம் பெற்றும் கூட இன்னும் வெகுவாக மாறாதது பெரியதுரதிருஷ்டமல்லவா?

ஃ ஃ ஃ

ஏதோ ஒரு முக்கிய மகாநாடு. தலைமைப் பிரசங்கம், வரவேற்புரை எல்லாம்தபாலில்கிடைத்தன. அவற்றைப் படித்துப் பார்க்கவே பல மணி நேரமாகும். அப்படியே போடுவதென்றல் பத்திரிகையில் இடம்காணது. ஆங்கில உதவி ஆசிரியர் அதை எப்படி பதிப்பித்தார் தெரியுமா? திடுக்குற்றுப் போனேன். ஒரு கையில் நீல பென்சில்எடுத்துக்கொண்டு, தலைமைப் பிரசங்க புத்தகத்தில் இடது புறமுள்ள எல்லப் பக்கங்களையும் அடித்துக் கொண்டே போனர். அதில் என்ன இருக்கிறதென்பது பற்றி அவர் சற்றும் கவலைப்படவில்லை. தலைமைப் பிரசங்கத்தை எவ்வளவு சிந்தனை செய்து அப்பெரியார் எழுதினரோ! இடது பக்கத்தில் என்னென்ன அருமை யோசனைகள் உள்ளனவோ! எல்லாவற்றையும் கண்ணை மூடிக் கொண்டு அடித்து, உதவி ஆசிரியர், பிரசங்கத்தையும்

தவறுக்கு அவரிடம் வருத்தம் தெரிவித்து, மறுநாள் திருத்தமும் வெளியிட்டோம். ''தலைமை ஆசிரியர் மிஸ்டர்...அவர்கள் காலமானதாக நேற்று வெளியிட்ட செய்தியை மகிழ்ச்சியுடன் மறுக்கின்றோம். அத்தவறான செய்தியை வெளியிட்டமைக்காக வருந்துகின்றோம்'' என்று வெளியிட்டு, அந்தப்பிரச்னையை அத்துடன் முடித்தோம். இது எனக்கு ஒரு நல்லபாடமாயிற்று. பின்னர் இப்படிப் பட்ட செய்தியை யாரும் கொணர்ந்தால் சுலபத்தில் நம்புவதில்லை. மனதுக்கு உண்மையென்று ஊர்ஜிதமான பின்பே வெளியிட வேண்டுமென்பதை உணர்ந்துகொண்டேன். தலைமை ஆசிரியர்மீது அந்த ஆளுக்கு என்ன ஆத்திரமோ தெரியவில்லை. தமது வஞ்சத்தை இப்படி பத்திரிகைமூலம் தீர்த்துக்கொண்டார். பின்னர் அந்தத்தோழரை பன்முறை தெருவில் சந்திக்க நேர்ந்தது. என்னைக் கண்டதும், முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டு செல்லுவார். குற்றமுள்ள நெஞ்சல்லவா? அவர் இப்போது ஓர் அப்புக்காத்தாகதிருவையாற்றில் தொழில் செய்கின்றார். அவரை இழந்துவிட எனக்கு விருப்பமில்லை. என்றலும் அவரைக்கண்டதுமே அந்தப்பழைய விஷமம்தான் நினைப்பு வருகிறது. சமீபத்தில் அவரைக்கண்டபோது சிரித்தேன். அவரும் சிரித்தார். ஆனல் ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை. இளமையில் இப்படி நாமும் ஏதாவது தவறு செய்வது சகஜம். வயதாகி அனுபவம் ஏற்பட்ட பின்நம்மைநாமே திருத்திக்கொள்ளுகிறோம் தானே!

ஃ ஃ ஃ

அடிமைப்பட்டிருந்த பாரத நாட்டை விடுதலை செய்ய மகாத்மா காந்தி அடிகள் புதுப்புது இயக்கங்களை ஆரம்பித்து நடத்தினர். அதில் ஒன்று தான் உப்புச் சத்தியாக்கிரகம். அதாவது உப்புச் சட்டத்தை மீறுவது. பரந்த கடலில் அரசாங்க அனுமதியின்றி நீர் எடுத்துச்சென்று உப்புக்காய்ச்சினுல் அது குற்றமாம். அதற்குக் தண்டனை

குப் பின் திருமதி ருக்மணி லெட்சுமிபதி என்ற வீராங்கனை சர்வாதிகாரியாகி இயக்கத்தை நடத்தினர். வேதாரண்யத்தில் பெரிய உப்பள முண்டு அங்கு இயற்கை அன்னை சேர்க்கும் உப்பை, சட்டத்தை மீறி அள்ளிவருவதுதான் இந்த சத்தியாக்கிரகம்.

சென்னையிலே இந்த இயக்கத்துக்குத் தலைமைவகித்தார் ஆந்திர கேசரியும் ''ஸ்வரஜ்யா'' பத்திரிகை ஆசிரியருமான பிரகாசம் அவர்கள்தான். சென்னையில் உப்பளம் எதுவுமில்லை. ஆகவே கடலிலிருந்து ஒரு பாத்திரத்தில் நீரை அள்ளி கடற்கரையிலே ஒரு ஸ்டவ் அடுப்பில் வைத்துக் காய்ச்சுவர். நீர் காய்ந்துகொண்டிருக்கையில், தலைவர்கள் தேசிய விடுதலையைப் பற்றி காரசாரமாய் பேசுவர். நீர் ஆவியாக மாறி, உப்புப் படிந்ததும், அதை எடுத்து பகிரங்க ஏலத்தில் விடுவர். மிகச்சிறிய அளவுதானிருக்கும் என்றலும் அந்த 'சுதந்திர உப்பு' நூற்றுக்கணக்கான ரூபாய்களுக்கு ஏலம் போகும். சட்டவிரோதமாக உப்புக்காய்ச்சுகையிலும் பொதுக் கூட்டங்கள் நடத்துகையிலும் குதிரைப்பொலிசார் கூட்டத்தில் புகுந்து அதை அடித்துக்கலைத்த காட்சிகள் என் கண்முன்னே நிற்கின்றன. எவ்வளவு பேர் அடிபட்டு காயப்பட்டு, சிறைச்சாலைகளுக்குச் சென்று நாட்டுக்காகத் தியாகம் செய்தார்கள் தெரியுமா?

சென்னை ஹைகோர்ட் கடற்கரையிலே ஆசிரியர் பிரகாசம் தலைமையில் ஒரு பெரிய கூட்டம் நடந்துகொண்டிருந்தது. பிரகாசத்தின் மூத்த பையன் வீட்டில் திடீரென இறந்துவிட்டதாகத் தகவல் கிடைத்தது. என்றலும் அவர் மனம் கலங்காமல், நம் குடும்பத்தைவிட, இந்திய தேசிய குடும்பத்துக்கான தன் கடமையே பெரிதாகுமென்று கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தினர், அந்தத் தியாகவீரர். ஒரு முறை குதிரைப்படை, [torn] கலைக்கவந்தது. மக்களில் சிலர் சிதறிஓட முயன்றனர். யாரும் பயந்து ஓடக்கூடாதென்றும், அப்படியே இருந்த இடத்தில் இருந்து எவ்வித தியாகத்துக்கும்

# இலக்கியச் சந்திப்பு

'சிங்கள இலக்கியத்தின் மேதை:

## மார்ட்டின் விக்கிரமசிங்கா

நாவல் துறைக்கு முன்னேடியாக விளங்கிய ஒரு சிலரில் முதன்மையானவர் மார்ட்டின் விக்கிரமசிங்கா. எழுபத்தாறு வயது நிரம்

பட்ட சிறுகதைத் தொகுப்பு களுக்கும் ஆசிரியராவார்.

யும் ஆங்கிலத்தில் இவர் எழுதியுள்ளார்.

நான் யாரையும் குறிப்பிட்டுப் பாராட்ட விரும்பவில்லை.

சிறுகதையைப் பொறுத்தளவில், எழுதுகிறவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுகதை இலக்கணத்துக்கு

மில்லை. ஓர் எழுத்தாளர் ''பிரச்னைக் குரியவர்'' என்று கருதப்படுவது விமர்சகர்களால் மட்டுமே. வாசகர்களில் பெரும்பாலானவர்களுக்கு இந்த வேண்டாத நுணுக்க ஆராய்வுகளைப் பற்றிக் கவலையில்லை. 'படைப்பு' என்பது முக்கியமாக வாசகர்களுக் [torn] வாசகர்கள் ஓர் எழுத்தாளரது படைப்பை அனுபவிப்பதன்மூலம் அந்த எழுத்தாளருடைய உள்ளத்தையும், எண்ணத்தையும் தெளிவாகப் புரிந்துகொள்ளும்படி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

'சிங்கள இலக்கியத்தின் [...]டி:

# மார்ட்டின் விக்கிரமசிங்கா

நாவல் துறைக்கு முன்னோடியாக விளங்கிய ஒரு சிலரில் முதன்மையானவர் மார்ட்டின் விக்கிரமசிங்கா. எழுபத்தாறு வயது நிரம்பிய இந் நாவலாசிரியர் கடந்த 40 ஆண்டுகளாகச் சிங்கள இலக்கிய உலகத்தில் சேவை செய்து வருகிறார். சர்வதேசப்புகழ்பெற்ற "கம்பறேலிய" உட்பட இருபத்தைந்துக்கு மேற்பட்ட நாவல்களை எழுதியுள்ள இவர், பத்துக்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுப்புகளுக்கும் ஆசிரியராவார். ஐந்துக்கு மேற்பட்ட இவரது நாவல்களும், பல சிறுகதைகளும் ரஷ்ய மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன. "Mysticism of Lawrence", "Aspects of Sinhalese Culture" ஆகிய சிறந்த நூல்கள் உட்பட ஐந்து ஆராய்ச்சி நூல்களையும் ஆங்கிலத்தில் இவர் எழுதியுள்ளார்.

கேள்வி: சிங்கள இலக்கியம், நாவல், சிறுகதை ஆகிய துறைகளில் கணிசமான அளவுக்கு வளர்ச்சியடைந்திருப்பதாக எண்ணுகிறீர்களா?

பதில்: சிங்கள இலக்கியம் சிறுகதைத் துறையைவிட, நாவல்துறையில்பாராட்டத்தக்க அளவுக்கு வளர்ச்சியடைந்திருப்பதாய் நான் கருதுகிறேன். ஆனால் இவ் வளர்ச்சி படிப்படியாக ஏற்பட்ட ஒரு முறையான வளர்ச்சி என்று சொல்ல மாட்டேன். குறுகியகால

**"சிங்களப் படைப்புகள் தமிழிலும் தமிழ் படைப்புகள் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்படவேண்டும். இதற்கு சிங்கள – தமிழ் எழுத்தாளர்கள் அடிக்கடி இலக்கியச் சந்திப்புகளை ஒழுங்கு செய்து கொள்வது பயனளிக்கும்."**

**"வாழ்க்கை விளக்கம்தான் இலக்கியம். வாழ்க்கை முன்னேற்றத்துக்கொவ்வாத – வேண்டாத விஷயங்களைப் பிய்த்துப் பிரச்னையைக் கிளப்பி வாசகனைக்குழப்பித்தானும் ஒரு பிரச்னைக்குரியவராகத் 'திகழும்' எழுத்தாளனை வெறுக்கிறேன்."**

எல்லையினுள்ஏற்பட்டுவிட்ட இந்த வளர்ச்சியை ஒரு "ராட்சத காரியம்" என்றே குறிப்பிடுவேன். 1952-ம் ஆண்டுக்குப் பின்னர்தான் சிங்கள நாவல்கள் கிசுகிசுவென்று வெளிவர ஆரம்பித்தன. பிறமொழி இலக்கிய உலகங்களில், பெரும்பாலும் குறிப்பிட்டவொரு துறையை ஒருசில எழுத்தாளர்களே ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது வழக்கம். ஆனால் சிங்கள நாவல்துறை வளர்ச்சிக்குப் பலர்பொறுப்பாயிருந்துள்ளனர். எனவே நான் யாரையும் குறிப்பிட்டுப் பாராட்ட [...] விரும்ப வில்லை.

சிறுகதையைப் பொறுத்தளவில், எழுதுகிறவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுகதை இலக்கணத்துக்கு அமைய எழுதமுயற்சிக்கிறார்கள். இந்த அளவுக்கு 'சிறுகதை'யை நம்மவர்கள் புரிந்து கொண்டிருப்பதையிட்டு நாம் பெருமைப்படலாம். சிறுகதைகள் என்ற பெயரில் நாவற்சுருக்கங்களைப் பிறமொழிக்கதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிலவற்றில் படித்திருக்கிறேன். புண்ணிய காந்தி விஜயநாயகா, ஜி. பி. சேனநாயகா, நியூடன் குணசேகரா போன்றவர்கள் சிங்கள சிறுகதைத் துறையில் நல்ல பணி செய்பவர்கள்.

சிறுகதைத் துறையின் வளர்ச்சியினால் தான் எதிர்காலத்தில், சிங்கள இலக்கிய உலகம் மட்டுமல்லாது வேறெந்த மொழி இலக்கிய உலகங்களும் பெருமைப்படலாம்.

கே: "பிரச்னைக்குரிய எழுத்தாளர்" என்று நீங்கள் யாரைக் கருதுவீர்கள்?

பதி: எந்த எழுத்தாளரும் பிரச்னைக் குரியவராகவோ, ஒரு புதிராகவோ இருப்பது பற்றி எனக்குச் சம்மதமாக வாசகர்களுக் [...] வாசகர்கள் ஓர் எழுத்தாளரது படைப்பை அனுபவிப்பதன்மூலம் அந்த எழுத்தாளருடைய உள்ளத்தையும், எண்ணத்தையும் தெளிவாகப் புரிந்துகொள்ளும்படியாக அந்த எழுத்து இருக்க வேண்டும். தனது எழுத்து மூலம் எந்தவொரு பிரச்னையையும் நேர்மையாக-தெளிவாக அலசுவதுதான் எழுத்தாளனுடைய கடமை. ஒரு பிரச்னையை எடுத்துக்காட்டி அதற்கான பரிகாரத்தையும் முடியுமான அளவுக்கு வைத்துவிடுவதுதான் ஒரு முற்போக்கு எழுத்தாளனுடைய கடமையாகும். 'வாழ்க்கை விளக்கம்தான் இலக்கியம்' என்று நம்புகிற நான் வாழ்க்கை முன்னேற்றத்துக்கொவ்வாத - வேண்டாத விஷயங்களைப் பிய்த்துப் பிரச்னையைக் கிளப்பி, வாசகனைக் குழப்பித், தானும் ஒரு பிரச்னைக்குரியவராகத் "திகழும்" எழுத்தாளனை நான் வெறுக்கிறேன்.

வாசகர்கள் மருண்டு போகாதவிதத்தில், அந்தந்த இலக்கிய முயற்சியின் உருவம், அமைப்பு, உத்தி போன்றவைகளையொட்டி இலக்கியப் பரிசோதனை செய்பவர்களை நான் வெறுக்கவில்லை, வரவேற்கிறேன்.

மனித சுபாவத்துக்கு முரண்பட்ட, முற்றிலும் யதார்த்த நிலைக்குப் புறம்பான வேண்டாத விஷயங்களை எடுத்துவைத்துக் கிளறி, வாசகர்கள் மனம் தீய்ந்துபோவதாகச் "சோதனைகள்" பண்ணும்பேர்வழிகளை எழுத்தாளர்கள் என்று நான் ஒப்புக்கொள்வேனாகில், அதுதான் நான் செய்யக்கூடிய மகாபாவமாயிருக்கும். ஒரு சில நோய்கள் சிலரது மனதைப் பற்றிக்கொள்வதால்தான், அவர்களுடைய படைப்புகளும் தெளிவில்லாத - புதிரான- அரைகுறைத் தன்மைகளைத் தாங்கி நிற்கின்றன.

படைப்பாளியும் தெளிவுள்ள மனத்தினனாய் இருத்தல் வேண்டும். படைப்பும் தெளிவுள்ளதாய் இருக்க வேண்டும்.

கே: தேசியப் பற்றுக்கும், இலக்கியத்துக்கும் ஏதாவது தொடர்புகளிருப்பதாய் நீங்கள் கருதுகிறீர்களா?

பதி: ஆம். தொடர்புகள் உள்ளன, நிச்சயம் இருத்தல் அவசியமுங்கூட. ஒரு நாட்டின் வளர்ச்சியோ அல்லது தரமோ அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம், பண்பாட்டு மகத்துவம்

[5-ம் பக்கம் பார்க்க]

பேட்டி கண்டவர்:
**பெரி. சண்முகநாதன்**

அ ர ஸ் கோ

மயில் மார்க்

கற்பூரம்




ஜப்பானிலிருந்து நம் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட 960 வில்லைகள் கொண்ட ரின் கற்பூரத்திற்கு எவ்வகையிலும் குறைவுபடாது எல்லாவகையிலும் அதற்கு நிகரான ரின் கற்பூரம் எங்களால் தயாரிக்கப்படும் "மயில்" மார்க் ரின் கற்பூரமே.

எங்கள் கற்பூரம் கொஞ்சமும் கலப்பு இன்றி சுத்தமான விளைவு கற்பூரத்தில் தயாரிக்கப்பட்டது.

மயில் மார்க் கற்பூரம் 128 வில்லைகள் கொண்ட 1/4 இரு., 1/2 இரு. பெட்டிகளிலும் உண்டு.

மயில் மார்க் கற்பூரம்

என்றே கேட்டு வாங்குங்கள்

சில்லறை விலை

1/4 இரு. பச்சை பெட்டி ரூபா 4-25 சதம்.
1/2 இரு. மஞ்சள் பெட்டி ரூபா 7-50 சதம்.
960 வில்லைகள் கொண்ட
தகரப்பெட்டி ரூபா 15-00

தயாரிப்பாளர்:

அரஸ்கோ கற்பூரத் தொழிற்சாலை,

பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தலைமைக்காரியாலயம்

106, றெக்ளமேஷன் றோட்; கொழும்பு-11

[...]ப் பிரசங்கத்தை எவ்வளவு சிந்தனை செய்து அப் பெரியார் எழுதினாரோ! இடது பக்கத்தில் என்னென்ன அருமை யோசனைகள் உள்ளனவோ! எல்லாவற்றையும் கண்ணை மூடிக்கொண்டு அடித்து, உதவி ஆசிரியர், பிரசங்கத்தையும் பாதியாகக் குறைத்துவிட்டார்! பின்னர் வலதுபக்கத்துப் பக்கங்களை படித்து அதிலும் வெகுவாக அடித்தார். ஆங்காங்கே சிற்சில உபதலைப்புக்களைக் கொடுத்து, பதிப்பித்துக் கொடுத்துவிட்டார். எல்லாம் ஒருமணி நேரத்துக்குள் முடிந்துவிட்டது!

[...]களை ஆரம்பித்து நடத்தினர். அதில் ஒன்று தான் உப்புச் சத்தியாக்கிரகம். அதாவது உப்புச் சட்டத்தை மீறுவது. பரந்த கடலில் அரசாங்க அனுமதியின்றி நீர் எடுத்துச்சென்று உப்புக்காய்ச்சினால் அது குற்றமாம். அதற்குத் தண்டனை என்பது சட்டம். காற்று, தண்ணீர் இவற்றைப்போல் உப்பும் மக்களுக்கு அவசியமானது. இயற்கை அன்னை ஏராளமாகத் தருகின்றாள். அதற்காகபிரிட்டிஷ்அரசாங்கத்துக்கு ஏன் வரி செலுத்த வேண்டும்? வேண்டியவர்கள் கடல்நீரிலிருந்துதேவை

[...] ஒரு முறை குதிரைப்படை, [...] கலைக்கவந்தது. மக்களில் சிலர் சிதறி ஓட முயன்றனர். யாரும் பயந்து ஓடக்கூடாதென்றும், அப்படியே இருந்த இடத்தில் இருந்து எவ்வித தியாகத்துக்கும் தயாராக இருக்க வேண்டுமென்றும் கூறி, அவரும் அசையாதிருந்தார். மக்களும் அப்படியே இருந்துவிட்டனர். குதிரைப்படை கூட்டத்தில் புகுந்து அட்டகாசம் செய்தது. அடக்குமுறைக்கு ஓர் எல்லையில்லை. மலையே சரிந்தாலும் மனம் சலியா வீர தளபதியவர்.

# யாத்திரைக் கடிதங்கள் – 12

அப்படியின்றி எல்லாவற்றையும் அவர் ஆறஅமரப் படித்து, பதிப்பிக்கிறதென்றால், அன்று பத்திரிகையில் அச்செய்தி வெளிவர முடியாது. மறுநாள் மகாநாடு நடக்கிறதாயின், முதல்நாள் தான் தபாலில் இப்பிரசங்கப் பிரதிகள் கிடைக்கும். முழுதும் படித்துப்பார்க்க நேரமேது? எல்லாம் அவசரம். விட்டது விட்டதுதான்! சுளையை வீசிவிட்டு தோலியை மட்டும் கொடுக்கலாம். எல்லாம் அந்த உதவி ஆசிரியரின் கையில்தானுள்ளது.

ஃ ஃ ஃ

ஒரு நாள் பழைய கல்லூரித் தோழரொருவர் ஒரு செய்தியைக் கொண்டுவந்தார். அங்கு நான் பணியாற்றும்விஷயம்அவருக்குத் தெரியாது. என்னைக்கண்டு சிரித்துவிட்டு, அச்செய்தியைப் பிரசுரிக்குமாறு மன்றாட்டமாகக்கேட்டார். அது ஒரு மரணச்செய்தி. ஒரு பள்ளிக்கூட தலைமை ஆசிரியர் இறந்துவிட்டதற்காக வருத்தம் தெரிவித்து, அவரைப்பற்றி புகழ்ந்திருந்தது. இதை உடன் வாங்கி, பதிப்பித்து, கீழே அச்சுக்கோர்க்க அனுப்பிவிட்டேன். என் பழைய தோழர் மிக மகிழ்ச்சியுடன் திரும்பினார். மறுநாள் காலை சுமார் 10 மணி இருக்கும் ஒரு பெரியவர் அன்றைய பத்திரிகையுடன் என்னிடம் வந்தார். அதில் குறிப்பிட்டுள்ள தலைமை ஆசிரியர் தாம் தானென்றும், தாம்இன்னும் இறக்கவில்லை என்றும் சொல்லி இதற்கு ஒரு மறுப்பு வெளியிடவேண்டும் என்றும் கேட்டார். இதைக் கேட்டு சிரிப்பதா, அழுவதா என்று தெரியாமல் சற்றே திகைத்தேன். பத்திரிகை

யான உப்பை எடுத்து, உப்பு வரிச்சட்டத்தை மீறி, பிரிட்டிஷ்அரசாங்கஅதிகாரத்தை எதிர்த்துப் போராடவேண்டுமென்றே இதைஒருபொது ஜன இயக்கமாக ஆரம்பித்தார். மகாத்மா தமது சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டி எனும் கடற்கரை இடத்துக்கு பலதொண்டர்களுடன் புறப்பட்டார். புறப்படும் திகதி, தம்முடன் வரும் தொண்டர்கள், சட்டத்தை மீறப் போகும் இடம் எல்லாவற்றையும் முன்கூட்டியே கடிதமூலம் அரசாங்க அதிகாரிகளுக்கு அறிவித்தார். மூடி மறைத்து அவர் எதுவும் செய்யவில்லை.

காந்தி அடிகள் வடநாட்டில் உப்புச்சத்தியாக்கிரகம் செய்கையில், தென்னாட்டு காந்தி எனப்படும் ராஜாஜியின் தலைமையில் திருச்சியிலிருந்து வேதாரண்யத்துக்கு ஒரு தொண்டர்படை புறப்பட்டது. வழியிலே இப் படையினருக்கு குடிதண்ணீர்கூடயாரும்கொடுக்கப்படாதென்பது தஞ்சை கலெக்டர் (அரசாங்க ஏஜென்ட்) தார்ன் என்பவரின் உத்தரவு. என்றாலும் ஆங்காங்கே பொதுமக்கள் இப்படையினருக்கு வேண்டிய உணவு, தங்க இடம் முதலியவற்றைக் கொடுத்து உதவினர். வேதாரண்யத்தில் புளியமிலாரினால் பொலீசார் தொண்டர்களை அடித்துசெய்த இம்சை கொஞ்சமன்று. ராஜாஜியைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். வடக்கே மகாத்மா கைதியான பின் திருமதி சரோஜினிதேவி சத்தியாகிரக இயக்கத்துக்கு சர்வாதிகாரியாக நியமிக்கப்பெற்றது. போல், தெற்கே ராஜாஜிக்

சென்னைக்கு சுமார் 15 மைல் தூரத்தில் சோழிங்கநல்லூர் என்ற கிராமம் உண்டு. அங்கு கடற்கரையில் உப்புச் சத்தியாக்கிரகம் நடக்கிறதென்று கேள்விப்பட்டு ஒரு நாள் சில தோழர்களுடன் சைக்கிளில் புறப்பட்டுச்சென்றேன். அப்போதுதான் சென்னையில் சைக்கிள்விடப்பழகிக்கொண்டேன். ஆனாலும்தனி சைக்கிளில் செல்லாமல் மற்றொரு நண்பருக்குப் பின் ஏறிக்கொண்டு சென்றேன். வழியிலேஒருபொலிஸ்காரர் சிவப்புத் தலைப்பாகையுடன் தூரவருவதைக் கண்டேன். சைக்கிளில் இருவர் ஏறிச் செல்வது குற்றமாகையால், அவசரமாகக் கீழே இறங்கி விழுந்துவிட்டேன்! அதற்குள் அந்த பொலிஸ் அதிகாரியும் வந்துவிட்டார். அவர் யார் தெரியுமா? கல்லூரியில் பி. ஏ. வகுப்பில் என்னுடன் படித்தவர்! "நீங்களும் உப்புச் சத்தியாக்கிரகம் செய்ய அங்கு போகிறீர்களா" என்று கேட்டார் அவர். "நாங்கள் பத்திரிகைக்காரர்கள்; செய்திதிரட்டச்செல்லுகிறோம்" என்று கூறி மேலே சென்றோம். ஓரிடத்தில் படகிலே செல்ல வேண்டும். ஓரன்பர் தேசியகீதங்களை உணர்ச்சியுடன் இனிமையாகப் பாடிவந்தார். அழகான அந்த இயற்கைச் சூழ்நிலையில், அந்தப்படகுயாத்திரை எவ்வளவு இன்பமாக இருந்தது தெரியுமா? மத்தியானம் சோழிங்க நல்லூர் போய்ச்சேர்ந்தோம். அங்கு ஒரு சவுக்குத்தோப்பில், ஒரு தொண்டர்படை உப்பு சத்தியாக்கிரகம் செய்யமுகா

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# மஞ்சள் கயிறு

"யாழ்ப்பாண எக்ஸ்பிரஸ்". வரும்நேரம். யாழ்ப்பாண ஸ்டேசன் சனத்திரளில் நெளிந்தது. அங்குமிங்கும் சனக்கும்பல் அலைந்தது; நெருக்கமடைந்தது. "கூ" ஒலி வண்டியின் அண்மையைத் தெரிவித்தது—

அப்போது மணியைப் பார்த்தேன். வண்டி புறப்பட இன்னும் ஆறு நிமிடங்களிருந்தன. டிக்கட் பெறக் கையைக் கவுண்டரில் வைத்தேன். அப்பொழுது ... என்முன்னே..."எனக்கு ஒரு ரிக்கற் எடுத்துத் தர்றீங்களா" என்ற குரல் ஒலி, யாழ் ஒலியாக ஒலித்தது.

திரும்பினேன். கோமள மான்முகமொன்று, வசீகரமான கரங்களால், கையிலிருந்த பையுள்ளிருந்து ஒரு பத்துரூபாவைஎடுத்து நீட்டியது. பணத்தை வாங்கினேன். எங்கே போகிறீர்கள் என்றேன் —

சுருள் சுழன்றது, என்னை ரசிகனுக்கியது. மார்பை இறுக்கிப்பிடித்து மூடியிருந்த வெள்ளை ஜாக்கட்டின் கையோரங்கள் மட்டும் வெளிக்குத் தெரியும்படி பக்குவமாக மூடிமறைத்துக் கொண்டிருந்தது. பச்சை நிறப்பட்டாடை. கழுத்திலே ஒரு மாலை. கையிலே கடிகாரம்... அவ்வளவுந்தான், அவளுடலில் அணிகள்! செம்மை இதழ், முத்துப் பற்கள், ரோஜாக்கன்னம்,

பூரிப்பு என் எண்ணங்களுக்குப் புதுமெருகு ஊட்டின.

மாகோ ஸ்டேசனில் எக்ஸ்பிரஸ் நின்றது. கைப்பையைக் கீழே வைத்துவிட்டு, உடலை நெளித்து வளைத்து அலுப்பைப் போக்கிக் கொண்டாள் அவள். அப்போது என் கண் வழி புகுந்து கருத்தில் பதிந்த அந்த 'அழகின் அசைவுகள்' இன்பத்தை அப்படியே உதிர்த்துக் கொட்டின. மெல்ல என் பக்கம் முகத்தைத் திருப்பினாள். எதிர்பாராது மின்னிய மின்னல், பார்வையைப் பறித்தெடுத்து, ஓடிமறைந்த அடுத்த விநாடியில், என்னென்ன உணர்ச்சிகள் ஏற்படுமோ அத்தனையும் ஒன்றுகூட விடாது என் உள்ளத்தில் படை எடுத்தன. அவள் முகம் கயிறுயது என் உள்ளம் பம்பரமாயது.

சுழன்ற பம்பரம் வேகங்கூடியது. பெருமூச்சு ஒலி கொண்டிருந்த 'எக்ஸ்பிரஸ்' தாமதித்தது. அடடா பொல்லாவலையல்லவா...?

வண்டி ஓடியது

கள்ளங்கபடில்லாது தனிமையிலே தயக்கமின்றி அழகுப் பதுமை அமைதியுடன் பிரயாணம் செய்கின்றதே ஆகா! தமிழ் மகள் தன்மையே தனிநிகரானது தான்! தனிமை அவளைச் கறை செய்ய முடியுமா? பெண்மையின் திண்மை அவளிடம் கிடந்தது.

"ஆகா! அவள் கழுத்தில் மஞ்சள் கயிறு முடியும் அதிருஷ்ட வாலிபன் யாரோ!"

அவளுடன் எதை எதையோ கதைக்க மனம் துடிக்கிறதே ஆனால் அவளுடன் கலந்துரை செய்யும் போது அவைகளைச் சொல்லாக்க முடியவில்லையே! ஆமாம், பெண்மையின் பெருமை கூடாத ஆபாச நெஞ்சங்களையும் திருத்துமோ!— வி-நோ-தி-னி.... விநோதமான பெண்தான்!

"கோட்டைக்கு" என்றாள். ரிக்கற்றை எடுத்து அவளிடம் நீட்டினேன். நன்றி கூறி வாங்கினாள். போய்விட்டாள்.

மணி ஒலி. எக்ஸ்பிரஸ் நகர ஆரம்பித்து விட்டது. யான் ஏறிவிட்டேன். அப்பொழுது ..அங்கே...

"இதைப் பிடியுங்கள் தயவுசெய்து..." என்றாள்.

—அது ஒரு சூட்கேஸ்.

அதை ஒரு மென்கொடி தூக்கமுடியாது தூக்கியபடி நின்று இவ்வாறு இரந்தது. உடனே பெற்றேன். அவள் ஏறவேண்டுமே! வண்டி நகர்ந்து கொண்டிருந்தது. உடனே என் கையைக் கொடுத்து இழுத்து ஏற்றி விட்டேன்.

"நல்ல வேளை"- "அப்பாடி"— சில சொற்கள் இப்படி பெருமூச்சொலியிட்டு அவள் வாயிலிருந்து பிறந்தன. ரிக்கட் கேட்ட அதேபெண்தான்...!

என் முன் உட்கார்ந்தாள். நன்றி பல அடிக்கடி கூறினாள். வண்டி ஓடிக்கொண்டிருந்தது. நேரமும் ஓடிக்கொண்டிருந்தது. என் உள்ளமும் ஓடிக் கொண்டிருந்தது.

"குனிந்த தலையில் அடர்ந்து கிடந்த கேசச் சுருள்..." உடுக்கு இடை, சிவப்புவர்ண உடல்...இயற்கைஅவளிடம் கொடுத்த கொடைகள்!"

அவள் முகம் என் மனதை உருக்கியது. அவளைப் பார்த்தேன். அவளும் பார்த்தாள். அவள் எப்படிப் பார்த்தாலும் அந்தப் பார்வையில் அன்பு வழிந்தோடுவதை உணர்ந்தேன். பருவமடைந்தபெண்ணை, இளமை நிறைந்த வாலிபன் பார்க்கும் போது ஏற்படும் உணர்ச்சிகளில் உடலைப் பொறுத்தவைகளைத் தவிர மற்றவை அத்தனையும் அவளை யான் பார்க்கும் போது எனக்கேற்பட்டன.

— புதுமைலோலன் —

ஒன்று - இரண்டு - மூன்று என் மணிமணியாக காலம் ஓடின. அந்த மூன்று மணிக்காலமும்- நூற்றிஎண்பது இன்பநிமிடங்களைத் தந்தது. உள்ளமடைந்த மாறுதல் அந்த மூன்று மணிக்காலத்தில்தானே உண்டு. - ஏதோ ஓர் உலகத்திலிருந்து என்னை யாரோ எப்படியோவேறோர் உலகுக்கு இழுத்துவந்துவிட்டார்கள். அந்தப்புது உலகம் எனக்களித்த புத்துணர்ச்சி,

இன்னும் வேகம் கூடியது. என் இதயத்திலிருந்து வியப்பு, வெட்கம், வேதனை ஒன்றுகலந்து ஆட ஆரம்பித்தன.

அவள் முறுவல் புரிந்தாள். முல்லைக்காடு அவள் வாயுள் அடங்கியிருந்தது. அற்புதம் அழகாகிவிட்டதோ! அழகு அற்புதமாகிவிட்டதோ!

உறைந்து கட்டியாயிருந்த பனித்துண்டு மின்சார அடுப்பின் மேலிட்டதுபோல உள்ளம் கரைந்தோடியது. அழகு, பருவ வயசு, நாகரீக உடு....நல்ல பொருத்தம்.

"உங்கள் பெயர்"

யான் கேட்டேன். அப்பொழுது பக்கமிருந்தோரெல்லாம் உறக்கத்துடன் உறவாடிக்கிடந்தனர்.

"விநோதினி"....

"விநோதினியா? அழகான பயர்"

"ஊர்?"

"யாழ்ப்பாணம் ரவுண்"

"எங்கே போகிறீர்கள்"

"கோட்டைக்கு"

"ஏன்"

"இப்பொழுது அங்கு தான் வசிக்கிறேன்."

அடுத்த விநாடி என்ன நடந்ததோ வேகமாக ஓடிக் பெட்டியைத் திறந்தாள் கண்ணாடியைப் பார்த்துச் கேசத்தை ஒழுங்கு செய்து கொண்டாள். பவுடரைச் சிறிது பூசினாள்....!

மருதானை கழிந்து வண்டி ஓடிக்கொணடிருந்தது. இன்னும் கணநேரமதில் கோட்டையை வண்டி பிடித்து விடும். ஆனால் என் ஆகாயக்கோட்டை....!

பெட்டியுள்ளிருந்து எடுத்துக் கழுத்திலணிந்தாள்— அது "தாலிக்கொடி"—

ஆச்சரியமாகப் பார்த்தேன். தாலிக்கொடியுடன் அவள் வதனத்தில் கண்ட அமைதி பெருமையுடையது. ஆனால் அவள் அகம் விநோதமானது....!

கோட்டையில் வண்டி நின்றது. அவள் கணவன் பெட்டியை இறக்கியபடி சேமம் விசாரித்தான். அவள் கண்ணும் மொழி பேசின. ..!

யான் இறங்கினேன். இளைஞனின் ஆசைக் கண்ணிலிருந்து காப்பாற்றும் மஞ்சள் கயிறு மகாசிறப்புடைய்து தான்.... ஆனால் இன்றைய பெண் மஞ்சள் கயிறு அணிய வெட்கமடைகிறாளே.... அட பொல்லாதநாகரீகமே, நீ செத்துமடி!

ஒரு முறை காறி உமிழ்ந்தேன். அந்தச் சளியிலே என் ஆசைக் கிருமியும் பறந்தது. (யாவும் கற்பனை)

# பொன்னொளிர் அம்புலி

வீட்டிலே வாசித்து முடித்துவிட்டுப் போட்டுக் கிடத்த அந்த நாவலில் உக்கிரமசிங்கன் சஞ்சரித்த பயங்கரமான காட்டை வருணித்திருந்த ஒரு வசனப் பந்தி என் ஞாபகத்திலிருந்தது. எங்கள் வீட்டுக்கு மேற்கேயிருந்த பனைத் தோப்பு மேலும்கைகொடுத்துதவிற்று. அதையே காடாகக் கற்பனைபண்ணிக் கொண்டு பென்சிலும் கொப்பியும் தேடி எடுத்து ஆரண்யகாண்ட வருணனையுடனே எழுதத்தொடங்கினேன். அதுதான் நான் எழுதிய முதல் கதை. எனது முதல் காவியம் இப்படித்தான் பிறந்தது. என்னென்னவெல்லாம் எழுதினேன், எவ்வளவு எழுதினேன் என்பதொன்றும் இன்று ஞாபகத்தில் இல்லை. உலக மகா அதிசயங்களில் ஒன்றான தொங்கும் பூந்தோட்டத்தைப்போல என் முதல் கதையும் ஆகாயத்தில் தொங்கிய ஒரு பனைக்காடு- அவ்வளவுதான்.

தமிழ் நாட்டு நாவலாசிரியர் வழியைப் பின்பற்றி இலங்கையை எட்டியும் பார்க்காமலே எப்படி அவர் இலங்கைக் காடுகளை வருணித்து கதை எழுதினாரோ அதுமாதிரி நானும் கானகத்தைக் கண்ணால் பார்க்காமலே பனங்காட்டைக்காடாகக் கற்பனைபண்ணித்தீட்டி விட்டேன்.

இந்தப் பூமியும் இதைப் போல சந்திரனும் இன்னும் எத்தனையோ நூறாயிரம் பூமியும் சந்திரனும் மனோதர்மத்துக்கும் அப்பாற்பட்ட அகண்ட பிரபஞ்ச வெளியிலே தொங்கிக் கொண்டிருப்பவைதாம். இப்பெரும் அகண்ட பகிரண்டத்தில் இப்பூமியின் கவர்ச்சிக்குள் ஒட்டிக்கொண்டிருக்கும் வாசகநேயரும் நானும் ஹிட்லரும், சர்ச்சிலும், நேருவும், காந்தியும் கூட எண்ணிப்பார்த்தால்கண்ணுக்கே புலப்படாத அற்ப புழுவுக்குச் சமம்-ஒரு தூசு, அதற்கும் மேல் ஒன்றுமேயில்லாத சைபர், சூனியம்

பெருமூச்சுடனே வீட்டுக்குள் நுழைந்தோம்.

நான் முதன் முதலாக எழுதியதை அன்றையதினத்தின் பின் என்ன செய்தேன் எங்கே வீசினேன் என்பதும் தெரியாது. அடுத்தடுத்த தினங்களில் பள்ளிக்கூடம் தொடங்கவே, அதிகாலையில் எழுந்து கொப்பி புத்தகங்களைத் தூக்கிக்கொண்டு நடந்தேன்.

பின்னொருபோது, வீட்டிலே வைப்புச் செப்புப் பெட்டியாகவிருந்த மரப் பெட்டியைத்திறந்து ஒரு நாள் எதையோ தேடிக் கொண்டிருக்கையில் அம்மா சொன்னாள்:-

"நீ என்னவோ எழுதிப் போட்டுவைத்த கடதாசி அந்தப் பெட்டிச் சட்டத்துக்குள்ளே எடுத்துச்செருகி வைத்திருக்கு, எழுதியதை இப்படிக் கண்டபடி எறியாதை. பத்திரமாய் வை."

எதைப் பத்திரப்படுத்தச் சொன்னாள்? நான் எழுதியதையா அல்லது கொப்பித் தாள்களையா?

இன்றையவரையும் இது எனக்குப் புரியவே இல்லை. இன்று- (நாளது ஜனவரி 1967) 37 ஆண்டுகளாகின்றன. நான் மெய்யாக எழுதத்தொடங்கி எழுதுவதையே துணிந்து தொழிலாகஏற்றுக்கொண்டு அதற்கு வெள்ளி விழாக் கூடக் கொண்டாடிவிட்டேன். இருபத்தைந்து ஆண்டு காலத்திலும் சிறுகதை, கட்டுரை, நாவல், நாடகம் என்று ஒன்றுவிடாமல் எல்லாமே எழுதினேன்- எவ்வளவோ எழுதிவிட்டேன். எங்கெல்லாமோ பயணம் போய்வந்தேன்- இலக்கிய யாத்திரைகள் செய்தேன்.

தமிழ் நெடுங்கணக்கிலுள்ள அத்தனை எழுத்தும் எனக்கு எழுதக் கற்றுக் கொடுத்து எடுத்த புத்தகம் கடகடவென்று வாசிக்கும்படி விண்ணனாக்கி அதன் பின் பள்ளிக்கூடத்திலே பாலர் அரிவரி வகுப்பில் கொண்டுபோய் சேர்த்துப் பெருமைப்பட்டாளே என்

கொடுக்க கோள் சொல்லக் கூட ஒருத்தி வீட்டிலே இருக்கிறாள்.

ஆனால் அம்மாவோ அமமா! நீ வாய்திறக்கிறாயில்லையே! என்னை உனக்கு எப்படியெல்லாம் தெரிகிறது, தெரிந்திருக்கிறது என்று ஒரு வார்த்தை சொல்கிறாய் இல்லையே!

இன்னமும் கூட நான் கொப்பிக் கடதாசிகளை வீணாக்குவதாகவே நினைத்துக்கொண்டிருக்கிறாயோ?

"நீ எழுதியதை வாசித்தேன். நன்றாய் எழுதுகிறாய். நீ ஒரு எழுத்தாளன்தானடா மகனே" என்று என் தாய் ஒரு நாளைக்கு எனக்குக் கனகாபிஷேகம் செய்ய வேண்டுமென்பதே என் தீராத விசாரம் ஆகிவிட்டது ஆனால் அது அத்தனை சுலபமாக நடைபெற்றுவிடுமென்று எண்ணுகிறீர்களா?

அதுமட்டும் நடைபெற்றுவிட்டால் அப்பொழுது நான் இந்த உலகத்தை-சீ. உலகம் எத்தனை அற்பமானது- என்னையே வென்றவனாகிவிடேனா?

என்னை வென்று தன்னையறிந்து இன்பமுறும் அந்த மகோன்னத நிலை எய்துவதற்கு ஒரு தந்திரோபாயம் கூறவல்ல வெண்புறா- வெள்ளிமல்லிகைச் சிட்டு, எங்கு பறந்துகொண்டிருக்கிறதோ!

(வளரும்)

## அலுவலகத்தில் இசை!

அலுவலகஊழியர்களைமகிழ்விக்க வைக்கக்கூடிய ஒரு முடிவுக்கும் வந்துள்ளார்கள் இந்த ஆராய்ச்சியாளர்கள். அதுதான் அலுவலகத்தில் இசை. அலுவலகங்களில் இன்னிசை மிதந்துகொண்டிருந்தால் ஊழியர்கள் அதிகம் வேலைசெய்கிறார்கள், வேலையில் அவர்களுக்கு அலுப்புத்தட்டுவதில்லை, தவறுகள் குறைகிறது என்று இந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கிறார்கள். மேற்கு ஜெர்மன் மனோதத்துவ ஆராய்ச்சியாளர்கள் இதனைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

## வேட்டையும் விளைவும்

— பாண்டியூரன் —

நலமழை விழுந்து பச்சை
தழைத்ததும் காட்டில் வாழும்
கலை மறி மரைமான் பன்றி
களத்தினிற் கூடிமேயும்
விலைகொடுத் திறைச்சி வாங்க
வேண்டியதில்லை; வேட்டை
அலைச்சலும் இல்லை, என்று
அனுபவம் சொல்லக்கேட்டேன்.

தோளிலே துவக்குத் தாங்கும்
துணைக் கொராள், தோழன் வேட்டைக்
காஷ்புலி! அடர்ந்த காட்டை
அலசிவைத் துள்ளானும்! என்
வாழ்விலே முதல்நாள் கூட
வழிதொடர் கின்றேன். நண்பன்
ஆள்நட மாட்டம் இல்லா
அதர்வழி யழைத்துச் சென்றான்.

இருளிலே நரிகள் காதில்
ஈயத்தைக் காய்ச்சி வார்க்கக்
சரிமலை போன்ற யானை
கதியினைக் கலக்கும்! பாய்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொகுசுவாகி என்றுகூறவும்

ருந்தது. நேரமும் ஓடிக்கொண்டிருந்தது. என் உள்ளமும் ஓடிக் கொண்டிருந்தது.

''குனிந்த தலையில் அடர்ந்து கிடந்த கேசச்

தில்தானே உண்டு. - ஏதோ ஓர் உலகத்திலிருந்து என்னை யாரோ எப்படியோவேறோர் உலகுக்கு இழுத்துவந்துவிட்டார்கள். அந்தப்புது உலகம் எனக்களித்த புத்துணர்ச்சி,

''கோட்டைக்கு''

''ஏன்''

''இப்பொழுது அங்கு தான் வசிக்கிறேன்.''

அடுத்த விஞடி என்ன நடந்ததோ வேகமாக ஓடிக்

அட பொல்லாத நாகரீகமே, நீ செத்துமடி!

ஒரு முறை காறி உமிழ்ந்தேன். அந்தச் சளியிலே என் ஆசைக் கிருமியும் பறந்தது. (யாவும் கற்பனை)

## நம்நாட்டுப் பிரமுகர்கள் — 5

# திருவாளர் சொகுசுவாதி

நீங்கள் பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறீர்கள். இருவர்இருக்க வேண்டிய 'சீட்'டில் நீங்களும் இன்னும் ஒருவரும் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

அப்போது, ஒரு முழங்கை உங்கள் முகத்தை உராய்கிறது. உங்கள் தொடை மேல் ஏதோசுமையாக உணரமுடிகிறது. அது பக்கத்திலிருப்பவருடைய தொடை என்பதை அறிகிறீர்கள். முழங்கை வந்து உங்கள்மூஞ்சியில் இடிப்பதன் மர்மமும் துலங்குகிறது. உங்கள் அயலவர் பத்திரிகையை வடிவாக விரித்துப் பிடித்து, அதில் மூழ்கியிருக்கிறார்.

ஆமாம்! உங்கள் பக்கத்தில் அமர்ந்திருப்பவர் வேறு யாருமல்ல, திருவாளர் சொகுசுவாதி அவர்களே!

இதே திருவாளர் சொகுசுவாதியை நீங்கள் உங்கள் வாழ்க்கையில் பல இடங்களில், பல சந்தர்ப்பங்களில் காண நேரிடும். அவரால் உங்களுக்கு அதிகம் தீமை ஏற்படாது. ஆனால், அவரது சேட்டைகள் உங்களுக்கு நிச்சயம் தொந்தரவு அளிக்கும்.

கோட்டை ரயில்ஸ்டேஷனில், களைக்கக் களைக்க ஓடிவந்து யாழ்ப்பாணம் ரயிலில் தொத்துகிறீர்கள். இருப்பதற்குஇடமிருக்கிறதாஎன்று சுற்றுமுற்றும் பார்க்கிறீர்கள். ஒரு 'சீட்'டிலே உங்கள் பார்வை விழுகிறது. அங்கு ஒரு சூட்கேசும், பக்கத்தில் அதற்குத் துணையாக ஒரு தலையணையும் கிடந்தது. ஆமாம்- பக்கத்திலிருப்பவர் சாட்சாத் திருவாளர் சொகுசுவாதி அவர்களே தான்!

திருவாளர் சொகுசுவாதி ஒரு சுயநலவாதி என்பதில் ஐயமேயில்லை. அவருடைய ஒரே ஒரு இலட்சியம், மற்றவர்கள் எக்கேடு கெட்டாலும் சரி, தான் சொகுசாக வாழவேண்டு மென்பதேயாகும்.

இதே சொகுசுவாதிதான், சினிமாத் தியேட்டர்களில் முன் ஆசனத்தில் காலை நீட்டியபடி,வாயில்சிகரெட்டை வைத்து, ஓர் இழுப்பு இழுத்துவிட்டு, அக்கம்பக்கமெல்லாம் புகையடிக்கும் ஆசாமியுமாகும். இந்தத் தியேட்டர்சொகுசுவாதியில் அதிதீவிரமானவர், தமது சொகுசை இன்னும் அதிகமாகவும் நீட்டி, விஸ்தரிக்க முயலவும் கூடும். இந்தஇடத்தில், இவரிடம் அதிக அவதானம் காட்டவேண்டியவர்கள் மெல்லியலாளர் என்பதைநான்சொல்லத்தேவையில்லை.

**'மயிலன்'**

நீங்கள் கடமையாற்றும் கந்தோரில், கிடைக்கக்கூடிய நல்ல மேசையின் முன்னால், இருப்பதற்கு வசதியான நல்ல கதிரையில் அமர்ந்தபடி, இன்று காலை வந்த பத்திரிகைகளைப் புரட்டிக் கொண்டு இருக்கிறாரே, அவரும் திருவாளர் சொகுசுவாதியே.

பஸ்சுக்கு நீண்ட நேரமாக 'கியூ'வில் நிற்கிறீர்கள். அப்பொழுதுதான், காய்கறி, மீன் எல்லாம் ஆறுதலாக வாங்கிவிட்டு, 'கியூ'வை நோக்கி விரைந்து வந்த ஒருவர், உங்களுக்கும் உங்களுக்குமுன் நிற்பவருக்குமிடையே தமது உடலை நாலாக வளைத்து, நெளித்து உங்களுக்கும் முதலிடத்தைக் கைப்பற்றிக் கொள்கி[றவர்] திருவாளர் சொகுசுவாதி என்றுகூறவும் வேண்டுமா?

டாக்ஸியில் நான்கு பேர் ஓரிடத்துக்குச்செல்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். முன்'சீட்'டில்,டிரைவருக்குப் பக்கத்தில், காரே தனது சொந்தம் போல், நல்ல வசதியாக,கையையும் வெளியே நீட்டியபடி சிழ்க்கையடித்தபடி உட்கார்ந்து வருபவர்திருவாளர்சொகுசுவாதியாகத்தான் இருக்க முடியும். சேரவேண்டிய இடத்தில் கார் வந்து நின்றதும், முதலில் இறங்கி, அவசரமாக மற்ற மூவருக்குப் 'குட்பை' சொல்லிவிட்டு, 'ஹாயா'க நடந்துசெல்பவரும் திருவாளர் சொகுசுவாதியாகத்தான் இருக்க முடியும். டாக்ஸிக்குப்பணத்தைப் பங்கிட்டுக் கொடுப்பவர்கள் மற்ற மூவருமாகத்தான் இருக்கவேண்டும். திருவாளர் சொகுசுவாதியின் திறமையை அறியாத அப்பாவிகள்அவர்கள்-பாவம்!

திருவாளர் சொகுசுவாதியை உங்கள் வீட்டிலும் நீங்கள் சந்திக்க முடியும். அவர் தான் வீட்டில் எல்லா வேலையும் செய்பவர் போல் சத்தம் போட்டுக் கொண்டிருப்பார். ஆனால், வேலை ஒன்றும் செய்ய மாட்டார். சாய்வு நாற்காலியில் தஞ்சம் புகுந்து விடும் அவர், அங்கிருந்தபடியே தமக்கு வீட்டிலுள்ளவர்களின் பணிவிடைகள் கிடைக்கவேண்டுமென்று எதிர்பார்த்திருப்பார்.

அசல்சொகுசுவாதிஒருவர் இருக்கிறார் அவர் எல்லோருக்கும் அறிமுகமானவர். வீட்டில் எவ்வளவு பஞ்சம் நிலவினாலும், மடிப்புக்கலையாத சேட்டும், லோங்சுமாக மினுமினுக்கும் சப்பாத்துடன், தலையும் அழகாக வாரி விட்டபடி, கையில் சிகரெட்டுடன், உலகமே தனது ராஜ்யம் என்ற பெருமிதத்தில் தெருவெல்லாம் ராஜநடை போட்டுக் கம்பீரமாக காலில் (காரிலல்ல!)ஊர்வலமாகவருகிறாரே,அவர்தான், எவ்வித கவலையுமற்ற சொகுசு... வாதி!

அடுத்த வாரம் —
திருவாள[ர்]
சுயேச்சை[...]

கும் வாசகநேயரும் நானும் ஹிட்லரும், சர்ச்சிலும்,நேருவும், காந்தியும் கூட எண்ணிப்பார்த்தால்கண்ணுக்கே புலப்படாத அற்ப புழுவுக்குச் சமம்-ஒரு தூசு, அதற்கும் மேல் ஒன்றுமேயில்லாத சைபர், சூனியம் என்று இன்றைக்கெல்லாம் பிரபஞ்ச இயல் சயன்ஸ் நமது தலைக்குத் தொப்பி போடுகிறது. அன்றோ, இது பற்றி நினைத்தவர்கள் மிகச் சிலர். அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த பிரகாசமாக ஆனந்த மூர்த்தியாக எங்கேயும் எத்தனைதூரத்திலும் ஆண்டவனையே கண்டு மனதுக்கு எட்டாத அத்தனையையும்அந்தஅருள்நிறைவுக்கேவிட்டு அனைத்தையும் கடவுள் சாந்நித்தியமாக வழிபட்டு அதில் மனச்சாந்தி கிட்டிய 'சின்ன மனிதர்' எனக்கு எழுதக் கற்றுக் கொடுத்து எடுத்தபுத்தகம் கடகடவென்று வாசிக்கும்படி விண்ணாக்கி அதன் பின் பள்ளிக்கூடத்திலே பாலர் அரிவரி வகுப்பில் கொண்டுபோய் சேர்த்துப் பெருமைப்பட்டாளே என் பாட்டி. ஆனால் அந்தப் பாட்டியின் மகள் - அவள்தான் என் தாயார், இத்தனை காலமாக நான் எழுதியதைப்பற்றி எழுதிக் குவித்ததைப்பற்றி ஒரு நாள் பார்த்து ஒரு வார்த்தை சொன்னதில்லை என்றால் அது வியப்புக்குரியதா காதா? 37 ஆண்டுகளுக்கு முன் அவள் கூறிய அதே வாய்மொழிதான் முதலும் கடைசியும் ஆயிற்று.

நான் மேற்கொண்ட எழுத்துந் தொழில், இருபத்

**— அ. செ. மு. —**

கள்தாம் நம்மைச் சுற்றிலும் வாழ்ந்தார்கள். வேலிப்பூவரசு மரத்தில் ஆட்டுக்கு குழைவெட்ட ஏறினோம். அதற்குமேல் நமது சரீரம் மேலே போனதில்லை. மூன்று [வ]ந்து நூலில் நாம் புனைந்த [க]ாற்றாடி-நமது கைபட்ட அபூர்வ படைப்பு ஒன்று மேலே போயிற்று. அதற்கப்பால் தூரதிருஷ்டி எட்டியதில்லை,மூளைஓடியதில்லை. ஆகாய வெளியில் மிக உயர்ந்தே முக வெள்ளைப் பருந்து பறந்ததைக் கண்டால் நாராயணா நாராயணா என்று கன்னத்தில் போட்டுக்கொண்டு வளவுக்குள் மேயப்போன கோழியும் குஞ்சும் எங்கே நிக்கிறது என்று தேடி கோழிக்கூரப்புத்தூக்கிக்கொண்டுஅதைப் பாதுகாக்க ஓடினோம். ஏன்-முதன் முதலாக ஆகாய விமானத்தை நம்மூரில் தலைக்குமேலே பார்த்தபோது என்னசெய்தோம், என்னதான் செய்திருப்போம்? கீழே குனிந்து ஒரு கல்லைத் தூக்கி அதற்கு இலக்கு வைத்து வீசியிருப்போம் என்று நினைக்கிறீர்களா? அதுகூடச் செய்ததில்லை. விமானம் பார்வையிலிருந்து மறையும்வரை கைகட்டிவானவெளியையே நோக்கி நின்றுவிட்டு ஒரு

ந்தைந்து ஆண்டு காலத்திலும் எத்தனையோபேரின் நட்பை எனக்குத் தேடிக் கொடுத்திருக்கிறது.

என்னை எழுத்துத் தொழிலுக்குள் பகிரங்கமாக இழுத்துவிட்ட சோ. சிவபாதசுந்தரமும் அவரை எழுத்துலகுக்குள் இழுத்துவிட்ட அமரர் கல்கியும், மற்றும் விபுலானந்த அடிகளாரும், வேறு பலரும் முதற் சந்திப்பின்போதே இன்னொருவரின் அறிமுகத்துக்கு இடம் வைக்காமல் ''ஓ! அவரைத் தெரியுமே'' என்று சொல்லிவிட்டார்கள். ,கல்கி'யோ நீண்ட காலம் பழகியவரைப்போல என் இரு கரமும்பற்றி அந்நியோன்னிய உறவு கொண்டாடினார்.

இன்றைக்கெல்லாம் இலக்கிய நண்பர்கள் தனித்தும் கூட்டமாகவும் எப்பொழுதும் என் சூழலில் காணப்படுகிறார்கள். நான் எழுதிய கதை கட்டுரை வெளிவந்த பத்திரிகைகளை என் வீட்டில் கொண்டுபோய் போட்டபோதெல்லாம் நொந்து சுமந்து என்னைப் பெற்ற மாதரசி அவற்றைப் படித்துப்பார்க்கவும் செய்கிறாள். என் சகஸ்ரநாம புனைபெயர்களை அவளுக்குக் காட்டிக்

## கல்வியின் நோக்கம்

[...]னில்லாமல் மாணவன் கல்வி கற்றுக் [...] கல்வியின் நோக்கம்.

—எல்பேர்ட் ஹபேர்ட்

வழிதொடர் கின்றேன். நண்பன்
ஆள்நட மாட்டம் இல்லா
அதர்வழி யழைத்துச் சென்றான்.

இருளிலே நரிகள் காதில்
ஈயத்தைக் காய்ச்சி வார்க்கக்
சரிமலை போன்ற யானை
கதியினைக் கலக்கும்! பாய்ந்த
வரிமுயல் ஈரல் நீரை
வரட்டிடும்! வானைத் தொட்ட
பெரியகா னகத்து மந்தி
பேச்சுமூச் சற்றுத் தூங்கும்!

விளக்கினை யழுத்தப் பற்றை
விளிம்பினுள் வீரைப் போரில்
பளிச்சிடும் இரண்டு காந்தம்
பாய்ந் துடன் அணையக் கால்கள்
தளர்ந்தன. நண்பன் கையைத்
தாவியே பிடித்தேன், நெஞ்சம்
குழந்தையின் உச்சிபோலக்
'குடுகுடுத்' ததிர்ந்த தங்கே.

காய்ச்சலும் கொதிக்க, நண்பன்
'கரடிதான்' என்றான் காதில்,
வாய்த்ததோ மரணம் என்று
வான்முகம் பார்த்தேன். 'சீச்சீ!
பேய்தனம், திருக்கொன் றைக்காய்
பிடிப்பெனத் தின்று தீர்த்துப்
பீச்சிய கரடி! நம்மாற்
பிழைத்தது.' என்றான் நண்பன்!

பாவிகள் உள்ளம் போலப்
படர்ந் திருள் படிந் துயர்ந்து
வானுறும் அடவிக் காட்டு
மத்தியோர் தளவாய் நாடி
மான் மரை பன்றி மேய
வருமென மறைந்தோம். மைசூழ்
கானகம் சில்வண் டாகக்
கதைத்தது காதிற் பாய்ந்து!

'உயர்த்துக விளக்கை' என்றான்
உயர்த்தினேன், உதறல்! மீண்டும்
பயத்தினை வளர்க்கும் வெள்ளிப்
பந்துகள் உருள, நண்பன்
புயத்திலே யணைத்து வில்லைப்
பொறித்தனன்! வெடியின் வேகம்
அயர்ந்தது. ஆறிச் சற்று
அண்மினோம், இலக்கை நோக்கி.

மரையென நண்பன் சொன்னான்
மகிழ்வொடு மடிவதற் காய்த்
தரையிலே கிடந்து பாய்ந்து
தவிப்பினூற் றடுமா றுற்றுக்
குரைகளை நிமிர்த்தி யோய்ந்து
கொலையினில் அணைந்த ஆண்மா
மரையது வென்றால் என்ன...?
மரையிலை மாடே மாடு!

ஆதிமா னிடர்க்கும், இந்த
அணுயுகத்தார்க்கும் என்ன
பேதமென் றறியக் கையிற்
பிடித்த துப் பாக்கி யொன்றே
போதும்; என்றுணரும் முன்னே
பெருமிதத் தோடு நண்பன்
சாதுவா யுரித் தறுத்துச்
சாக்கிலே கட்டிக் கொண்டான்!

வேட்டையும், இறைச்சி மீதாம்
விருப்பமும், ஊனம் உண்ணும்
சோட்டையும், அவற்றி லுண்டாஞ்
சுவைகளும் அவிந்து, நண்பன்
வீட்டிலே யிறைச்சி விற்கும்
விஷயமும் விளங்கி, நானும்
வேட்டைதான் யமனுக் கென்ற
விரத்தியில் விழிக்கக் கண்டேன்.




சென்ற் அந்தோனிஸ் குறூப்
[...]னேஸ் வீதி தெற்கு, கொழும்பு-10.
[...]ான்: 4261, 4262.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை வாங்கப் போனேன்; 'இது'தான் வாங்கி வந்தேன்!

## கலை அரங்கம்

கையிலே சிறுகதை பைல். பையிலே மட்டு நகர் எம். பி. திரு. செ. இராசதுரை தமது நண்பர் எம். ஜி. ஆருக்குத் தந்த அறிமுகக் கடிதம். மனதிலே எத்தனையோ பேருக்கு உதவி செய்து அவர்களையெல்லாம் முன்னேற்றிய எம். ஜி. ஆர். எனக்கும் உதவி செய்வார் என்ற நம்பிக்கை. அதையொட்டி ஊஞ்சலாடும் இனிய நினைவுகள்!

ஒரு மாதத்திற்கு முன்பு மேற் சொன்ன இவைகளைச் சுமந்துகொண்டு உச்சி பிளக்கும் வெயிலிலே சென்னையிலுள்ள கோடம்பாக்கம் வீதியிலிருந்து பிரிந்து செல்லும் செம்மண் சாலையிலே, எம். ஜி. ஆர். தோட்டத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தேன். இல்லை; உச்சிவேக, உள்ளங்கால் கொதிக்க 'ஆ, ஊ' என்ற முனகலுடன் ஓடிக்கொண்டிருந்தேன்!

என்னுடையசிறுகதைத் தொகுதி ஒன்றுக்கு எம். ஜி. ஆரிடம் ஒரு வாழ்த்துரையும் அறிஞர் அண்ணாவிடம் ஒரு முன்னுரையும் கலைஞர் கருணாநிதியிடம் ஒரு கருத்துரையும் பெற்று சென்னையிலேயே

''இன்று மாலை 4 மணிக்கு எம். ஜி. ஆர். தோட்டத்துக்கு வந்தால் அவரைச் சந்திக்கலாம்'' என்றார். அவருடைய அந்தச் சொற்களை நம்பித்தான் மேற்சொன்ன இந்தப் 'பாலைவனப் பிரயாண'த்தில் ஈடுபட்டிருந்தேன்.

ஒருபடியாகதி.மு.க.வின் இரு வர்ணக் கொடி பறக்கும் எம். ஜி. ஆர். மாளிகையை அடைந்தேன். வாசலிலே இரு பெரிய இரும்புக் கேற்றுகள் வழி மறித்துக்கொண்டு நின்றன. அது போதாதென்று இரு பொலிஸ்காரர்கள் துப்பாக்கி சகிதம் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்கருகில் சாதாரண உடையோடு நின்று கொண்டிருந்த ஒரு நடுத்தர மனிதர் என்னைக் கண்டதும் ''என்ன விஷயம்'' என்று கேட்டுக் கொண்டு வந்தார்.

'நான் இலங்கையிலிருந்து வந்திருக்கிறேன். எம். ஜி. ஆர். அண்ணாவைப் பார்க்கவேணும்''- என்றேன்.

''இப்பொழுது யாருமே அவரைப் பார்க்க முடியாது''-பதில் வந்தது.

''எத்தனை நாளாய் இந்

ருக்கிறது' என்று எண்ணிய நான் 'இனிமேல் இவனோடு பேசிப்பயனில்லை' என்று முடிவுக்கு வந்தவனாய் அவ்விடத்தை விட்டுப்புறப்பட்டேன்.

இனிய நினைவுகளைப் பறிகொடுத்த நிலையில் மனம்சோர உச்சிபிளக்கும் வெயிலில் நெடுந்தூரம் நடந்துவந்த களைப்பினால் உடல்சோர அப்பப்பா...என்னால் அப்பொழுது ஓரடி கூட எடுத்து வைக்க முடியாத நிலை! இந்நிலையில், எந்நிலைக்காக பரிதாபப்பட்டு உதவிசெய்வது போல் ஒரு பஸ் வந்துநின்றது! அவ்வளவுதான், நான் அதில் ஏறி உட்கார்ந்ததும் அது புறப்பட்டது!

அன்று மாலை எம். ஜி. ஆரின் 'பரங்கிமலை'த் தொகுதி விழாக்கோலம் பூண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. எங்கு பார்த்தாலும் தி. மு. க. வின் இரு வர்

## எம். ஜி. ஆரிடம் கொடுத்த கடிதத்தை குண்டன் கசக்கி எறிந்தான்

ணக்கொடிகள் புத்தொளி வீசிப் பறந்துகொண்டிருந்தன. ஒவ்வொருவீட்டு முற்றத்திலும் நிறைகுடங்கள் வைக்கப்பட்டு மாலைகளும் தயாராக வைக்கப் பட்டிருந்தன. ஒரு சிறிது தூரம் நடந்து சென்றதும் கோடம்பாக்கம் ஏ. வி. எம். ஸ்டுடியோவுக்கு முன்னால் நூற்றுக்குக் குறையாத வாலிபர்கள் வீதியின் இருமருங்கிலும் அணிவகுத்துநின்றனர். அவர்களில் கடைசியாக நின்ற ஒரு பையனிடம் சென்று ''என்ன தம்பி விஷேசம்? ஆராவது இங்கு வர்ருங்களா?', என்று கேட்டேன். ''ஆமாம், சார் இன்னிக்கு நம்ம எம். ஜி. ஆர். ஆஸ்பத்திரியிலிருந்து சுகமாகி முதன்முதலாக இந்தஊர் மக்களுடைய குறைகளைக் கேக்கிறதுக்காக வர்ருரு'' என்று அந்தப் பையன்

திற்குள் இடிபட்டு நுழைந்து எம். ஜி. ஆரிடம் இராசதுரை அண்ணாவின் அறிமுகக் கடிதத்தைக் கொடுத்துவிட்டேன்.

அடுத்தகணம், அந்தோ ... எம். ஜி. ஆருக்கு அருகில் நின்றுகொண்டிருந்த ஒரு குண்டன் அதை அவரிடமிருந்து பிடுங்கிக் கசக்கி எறிந்துவிட்டான்! அவனால் கசக்கி எறியப்பட்ட அக்கடிதம்என்னைப் பார்த்து சிரித்துக்கொண்டிருந்தது. இத்தற்குள் எம். ஜி. ஆர். ஊர்வலமாக அழைத்துச்செல்லப் பட்டார். நானும் கடிதத்தை எடுத்துச் சட்டைப் பைக்குள்வைத்துக் கொண்டு ஊர்வலத்தைப் பின்தொடர்ந்தேன்!

வழியிலேஒருமண்டபம்! உள்ளே நுழைந்த எம். ஜி. ஆர்., அம்மண்டபச் சுவரில் மாட்டப்பட்டிருந்த சாமி படங்களை வணங்கினர். அவருக்கு வீபூதி, சந்தனம் வழங்கப் பட்டது. அதையும்வாங்கி பூசிக்கொண்டார்.

இதை அடுத்து எம். ஜி. ஆர். ஒரு வீட்டில் நுழைந்துஒருசிறிதுநேரம் இளைப்பாறினர். எப்படியாவது உள்ளேநுழைந்து அக்கடிதத்தைக் கொடுக்கலாமென்று முயற்சித்தேன்.

ஆனல் அந்தோ! மறுபடியும் அந்தக் 'குண்டன்' என்னை உள்ளே நுழையாதபடி தடுத்து விட்டான். 'இந்த நாச

## எம். ஜி. ஆர். சாமி கும்பிட்டு விபூதி பூசினர்

இந்த அக்ரேஸ் எல்லாம் இப்படித்தான்! நாங்கள் தான் அவங்களைக்கடவுள்களாய்நினைக்கிறது. அவங்கள் எங்களை மனுஷராய் கூட மதிக்கிறதில்லை. நாலைஞ்சு மாளிகையைக் கட்டி வைத்திருப்பாங்க. வீட்டைபோனல் வேலைக்காரன் 'ஐயா ஆபிஸிலை' என்பான் அங்கை போனல் அங்கையுள்ளவன் ஐயா தோட்டத்திலை இருக்கிருரு என்பான். தோட்டத்துக்குப் போனல் அவர்ஸ்டுடியோவுக்கு போயிட்டார்

மணிக்கு வாங்க'' என்ருன்.

'அப்பாடா! நான் பட்ட தொல்லைகள் இவ்வளவுமே போதும்!! இனிமேல் சீவியத்திலை வேண்டாம் இந்த உத்தியோகம்' என்று முடிவுசெய்த நான் அத்துடன் எம் ஜி. ஆரைப் பார்க்கவேண்டுமென்ற ஆசைக்கும்முழுக்குப் போட்டுவிட்டு தியாகராயநகரிலுள்ள எனது நண்பரின் அறைக்குத் திரும்பினேன்.

அப்பொழுது அவர் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். அவரிடம்போய் ''எம். ஜி. ஆரைப்பார்க்க வந்த நான் பட்ட அவதிகளைச் சொல்லிஅழுதேன்.

அவர், ''எனக்கு எப்பொழுதோ தெரியும் இப்படி நடக்குமென்று!



# தென்னம்பிள்ளை தாபரிப்பு

தென்னைச் செய்கைக்காக அரசாங்கம் முடிக்குரிய காணிகளை பொதுமக்களுக்கு வழங்குகிறது. இதற்காக குடியேற்றத்திட்டங்களையும் உருவாக்கி பணஉதவியும் அளித்து ஊக்கமளிக்கிறது. தென்னம் பிள்ளை தாபரிப்பு பற்றி இக்கட்டுரை விளக்கிக் கூறுகிறது.

தென்னம் பிள்ளைகளை வளர்க்க மணற்பாங்கான நிலம் வேண்டும். அப்படிப்பட்ட நிலம்இல்லாவிட்டால் ஒன்று செய்யலாம். மண்ணை சுமார் ஒரு அடி அல்லது ஒன்றரை அடி தோண்டி அதில் மணலைப்போட்டு நிரப்புங்கள். இவ்வாறு செய்வதால் உகந்த வடிகால் அமைக்கலாம். கரையின் உபத்திரவம் இருக்காது.

மணலும் கிடைக்காவிட்டால் அதிக செழிப்பில்லாததும்பொரபொரப்புள்ளதுமான நிலத்தை தேர்ந்தெடுக்கவும். திறந்தவெளியில் நாற்றங்கால்போடுவது நல்லது. அதிக நிழல் சாயாதிருக்கும் தென்னந்தோப்பிலும் பிள்ளைகளை வளர்க்கலாம்.

நீண்ட, அதிக அகலமில்லாத பாத்திகள் கட்டவும். நாலைந்துநெற்றுகள்புதைக்க இடமுள்ள அளவுக்குப் பாத்தி கட்டவும். பாத்திகளுக்கு பாசனம் செய்ய அருகில் கிணறு இருக்கவேண்டும்.

ஓராண்டுக்கு மேல் பிள்ளைகளை வைத்திருக்க வேண்டுமானல் குழிக்குகுழி அரை

[5-ம் பக்கம் பார்க்க]

தைலங்களின் அரசன்!
சிங்கம் மார்க் சந்தனாதித் தைலம்
ஒவ்வொரு யாழ்ப்பாண வாசியும் வாங்கி உபயோகிப்பது இதுவேதான்!!
எங்குமே கிடைக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடையசிறுகதைத் தொகுதி ஒன்றுக்கு எம். ஜி. ஆரிடம் ஒரு வாழ்த்துரையும் அறிஞர் அண்ணுவிடம் ஒரு முன்னுரையும் கலைஞர் கருணுநிதியிடம் ஒரு கருத்துரையும் பெற்று சென்னையிலேயே வெளியிடவேண்டும் என்றெரு ஆசை என் மன

ந்து வந்திருக்கிறேன். எம். ஜி. ஆர். அண்ணுவைப் பார்க்கவேணும்''- என்றேன்.

''இப்பொழுது யாருமே அவரைப் பார்க்க முடியாது''-பதில் வந்தது.

''எத்தனை நாளாய் இந்தக் கெடுபிடிங்க?''

''........'' பதிலில்லை.

## தமிழகம் சென்று வந்த புலவர் தமிழ் மாறனுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவம்

தில் கருவாக உருவாகி நெடுநாட்களாகத் தொல்லைகொடுத்துக்கொண்டிருந்தது! எப்படியாவது இதைப் 'பிரசவித்து'விட வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆபீஸ்லேலீவு- அதுவும் சம்பளமில்லாத லீவு எடுத்து ஏராளமான பணம் செலவழித்து கொழும்புபோய் பாஸ்போர்ட், விசா எல்லாம் எடுத்துக்கொண்டு அன்றுதான் சென்னை வந்திருந்தேன். வந்தன்றே தியாகராயநகரிலுள்ள 'பிருந்தாவனம்' ஓட்டலில் 25 சதம் கொடுத்து இராஜதுரை அண்ணு தந்த எம். ஜி. ஆரின் அந்தரங்க இலக்கத்தோடு தொடர்பு கொண்டேன். எம். ஜி. ஆர். பேசுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனுல் அவர் ஊழியர்களில் ஒருவர்தான் பேசினுர். அவரிடம் விஷயத்தைச் சொன்னேன்.

-மீண்டும் எம். ஜி. ஆரை பார்க்கவிடும்படி வற்புறுத்தினேன்.

'அதெல்லாம் முடியாது சார். லாயிஸ் ரோடிலை ஐயா ஆபீஸ் இருக்கு, நீங்கள் அங்கிட்டுப்போய் அவங்களோடு தொடர்பு கொள்ள முயற்சி செய்யுங்கள்''- ஊழியர்.

''சரி, நீங்கள் இந்த லெட்டரையாவது கொண்டுபோய் ஐயாவிடம் கொடுத்து அவர் என்ன பதில் சொல்கிருர் என்று கேட்டுவந்துசொல்லுங்களேன்''- நான்.

''எதுவுமே முடியாது சார்.''

''ஒருவேளை அந்த இரும்புக் கேற்றுகள் தானுகத் திறந்தாலும் திறக்கும்! ஆனுல் இவனுடைய மனக் கதவுகள் ஒருபோதும் திறக்கவே திறக்காதுபோலி

இங்கு வர்ருங்களா?', என்று கேட்டேன். ''ஆமாம், சார் இன்னிக்கு நம்ம எம். ஜி. ஆர். ஆஸ்பத்திரியிலிருந்து சுகமாகி முதன்முதலாக இந்த ஊர் மக்களுடைய குறைகளைக் கேக்கிறதுக்காக வர்ருரு'' என்று அந்தப் பையன் பதிலளித்தான். 'இந்தக் குறையறிவிப்பு விழாவிலாவது எம். ஜி, ஆரிடம் நமது குறையைத் தெரிவிப்போம்' என்று முடிவு செய்தவனுய் நான் அவர்களோடு ஒருவனுகச் சேர்ந்து நின்றேன். ஒரு சிறிது நேரத்தில் பாண்டு வாத்தியங்களும் ''வாழ்க எம். ஜி. ஆர்.! வாழ்க மக்கள் திலகம்!'' என்ற வாழ்த்தொலிகளும் ஒரு சேர முழங்க எம். ஜி. ஆர். நீலநிற டெர்லின் சேட்டணிந்து பூரிப்புத் தவழும் முகத்துடன் வந்திறங்கினுர். அடுத்த கணம் அங்கிருந்த மக்கள் கூட்டம், 'இனிப்புப் பண்டத்தைச் சுற்றி மொய்க்கும் ஈக்கூட்டம்' போல் அவரை மொய்த்துக் கொண்டது! எப்படியோ நானும் அந்தக் கூட்டத்

நுழையாதபடி தடுத்து விட்டான். 'இந்த நாச

போனுல் அவாஸ்டுடியோவுக்கு போயிட்டார்

## எம். ஜி. ஆர். சாமி கும்பிட்டு விபூதி பூசினுர்

மாய்ப்போன குண்டன் இருக்கும் வரையில் நாம் எம். ஜி. ஆரைப் பார்க்க முடியாது' என்றெண்ணிய நான் எல்லையற்ற சோர்வோடு அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டேன்.


மறுநாள் காலை பத்து மணியிருக்கும்—

லாயிஸ் ரோடிலுள்ள எம். ஜி ஆர். ஆபிஸுக்குள் நுழைந்தேன். அங்கிருந்த பியூன் பையனிடம் வந்தவிஷயத்தைச் சொன்னேன். அவன் ''இங்கே யாருமில்லை. மாலை 4

என்று பதில் கிடைக்கும். இவங்க மனுசங்களா?'' என்றெரு பெரிய லெக்ஷரையே என்முன் நடத்தி விட்டார்!

என்னஇருந்தாலும் மக்கள் திலகத்தை எனது நண்பர் சொன்ன 'இந்த நடிகர்களின்' வரிசையில் சேர்க்க என்மனம் இடம் கொடுக்க வில்லை. 'அவர் ஊருக்கு நடுவிலுள்ள ஒரு நன்னீர்க்குளம். ஆனுல் அவரைச் சுற்றியிருப்பவர்கள் அந்தக்குளத்து நீரை எடுத்து எவரும் அருந்தாதபடி அதைச் சுற்றிப் போடப்பட்ட முள்வேலிகள்' என்றுதான் அதுமுடிவுக்கு வந்தது.

ஆனுல் உங்கள்மனம்...?



ஜெமினியின் ஏக்கம், சா... பாசம்,
நாகேஷ், மனேரமாவின் ... எல்லாம்
அண்ணுவின் ...

## யாழ்ப்பாணத்து நாடகம் திரைப்படமாகும்

சுண்டிக்குளி நாடகமன்றத்தின் 29-வது தயாரிப்பான 'அடங்காப்பிடாரி' என்னும் சமூகசீர்திருத்த ஹாஸ்ய நாடகம் வெகு விரைவில் திரைப்படமாகவிருக்கிறது. வடமாகாணத்தில் 79 தடவையாக அரங்கேற்றப்பட்டு நாடகரசிகர்களின் அமோக ஆதரவைப் பெற்ற இந்த நாடகம் கடைசியாக சுண்டிக்குளியில் நரியன்குண்டுமைதானத்தில் அரங்கேற்றப்பட்டது.

இந்நாடகத்தை திரைப்படமாக்குவதற்குரிய நடவடிக்கைகளில் இந்நாடக மன்றத்தலைவர் திரு. சி. கனகையா தீவிரமுயற்சியில் ஈடுபட்டுள்ளார். இலங்கையின் ஒரு பிரபல சினிமாத் தயாரிப்பாளர் கமிட்டியுடன் இதுசம்பந்தமாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிந்துள்ளதாக இந்நாடகமன்றத் தலைவர் அறிவித்துள்ளார்.

இந்நாடகத்தில் பிரபல நடிகர்களான டாக்சி டிரைவர்புகழ் திரு. வி. சி. பரமானந்தம், திரு. சி. கனகையா, திரு. வி. சி. குஞ்சிதபாதம், திரு. நடராசன் ஆகியோர் நடிப்பது குறிப்பிடத்தக்கது.

—எம். எஸ். ரி.


எங்குமே கிடைக்கும்!




குறும்புத்தனம் நிறைந்தவன்

உங்கள் குழந்தைக்கு ஆரோக்கியம், வலிமை, மகிழ்ச்சி நீங்களும் கொடுக்கலாம்.

ஒரு குழந்தையின் உடல் உற்சாகமாக வளர்வதற்கும், கண்பார்வை தெளிவாக இருப்பதற்கும் வேண்டியது வைட்டமின் 'ஏ'. பலமுள்ள எலும்புகளுக்கும், உறுதியான பற்களுக்கும் வேண்டியது வைட்டமின் 'டி'. வைரமான சதைக்கும், களங்கமற்ற சருமத்துக்கும் வேண்டியது வைட்டமின் 'ஸி'. உங்கள் குழந்தைகளுக்கு இந்த வைட்டமின்கள் கிடைப்பதற்கு நிச்சயமான வழியொன்றுண்டு. அதாவது, அவர்கள் தினமும் ''ஹலிபொறேஞ்'' அருந்த வேண்டும்.

உண்மையில், வாழ்நாள் முழுவதும் சலதோஷம், தொற்று நோய்கள் வராதபடி எதிர்க்கும் சத்தியை உடம்புக்கு அளிப்பவை 'ஹலிபொறேஞ்'சில் அடங்கியுள்ள மூன்று பாதுகாப்பு வைட்டமின்களே.



ஹலிபோரேஞ்

உற்சாகமான வளர்ச்சிக்கும், உறுதியான விருத்திக்கும்

இது கிளாஸ்கோ-அலன்பறீஸ் (சிலோன்) லிமிட்டெட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி பெயர்ப்பு -(3)

மொழிபெயர்ப்பு முறைகளில் படுமோசமான, பழிப்புக்கிடமான மொழி பெயர்ப்பு எதுவென்றால் சரியான கருத்தைப் புரிந்து கொள்ளாமல் பிறமொழி சொல்லுக்கு நேரடியான தமிழ்ச் சொல்லை எடுத்து அப்படியே கோர்த்துவிடுவதாகும். இதற்கு ஒரு பிரசித்தி பெற்ற உதாரணம் 'ட்றேட் யூனியன்' என்பதை 'வர்த்தக சங்கம்' என்று மொழி பெயர்ப்பது.

நாடாளுமன்றத்தில் நடக்கடபோகும் விஷயங்களை வரிசைக்கிரமமாகத் தரும் நிகழ்ச்சி நிரலுக்கு ஆங்கிலத்தில் 'ஓடர் புக்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இது சும்மா மொட்டையாக 'ஒழுங்கு புத்தகம்' என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த 'புத்தகம்' மொழிபெயர்ப்பவர்களுக்கு ஒரு நல்ல வேட்டைக் காடு. இதில் பற்பல கோமாளித்தனங்களை அடிக்கடி பார்த்து ரஸிக்கலாம். சமீப காலத்தில் நான் இதில் கண்டுபிடித்த ஒரு முத்து 'பொலிஸ் பரிசோதகர் நாயகம்' என்பதாகும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் என்பதன் மொழி பெயர்ப்பு. பொலிஸ் என்ற சொல்லுக்கு தமிழ் கிடைக்கவில்லை, அது தப்பிவிட்டது. இன்ஸ்பெக்டர் என்றால் சோதனை செய்பவர் அல்லது பரிசோதகர். ஜெனரல் என்றால் நாயகம். எவ்வளவு சுலபமாக மொழிபெயர்ப்பு முடிந்துவிட்டது! அடுக்கடுக்காக, கச்சிதமாக!

## சொல்லுக்குச் சொல் தெரிவு

பொலிஸ் இன்ஸ்பெக்டர் என்பதற்கும் பொலிஸ் பரிசோதகர் என்று மொழி பெயர்த்திருக்கிறார்கள். பாடசாலைகள் தோறும் சென்று மாணவர்களின் தராதரங்களைப் பரிசோதிப்பவர் பள்ளிக்கூடப் பரிசோதகர். சங்கக் கடைகளுக்குப் போய் சோதனை போடுபவர் கூட்டுறவு பரிசோதகர். அதுபோல......? பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று பரிசோதிப்பவர், பொலிஸ் பரிசோதகர். இவர்கள் எல்லோருக்கும் நாயகமான பரிசோதகர், பொலிஸ் பரிசோதகர் நாயகம்! அப்படித்தானே?

ஒருகூட்டத்துக்கு தலைமை தாங்கி அதை ஒழுங்காக நடப்புவிப்பவரை உதாரணமாக எல்லோரும் 'சபாநாயகர்' என்றே அழைக்கிறோம். நாடாளுமன்றம் கூடும் போதும் ஒரு கூட்டம் நடக்கிறது. அதற்குத் தலைமை தாங்குபவரும் சபாநாயகர்

தானே. ஆனால் நமது மொழி பெயர்ப்பு விண்ணர்கள் சபாநாயகர் என்று பொருட்படும் 'ஸ்பீக்கர்' என்ற ஆங்கிலச்சொல்லுக்கு 'வாசகர்' என்று நாமம் சூட்டி தமிழை வளர்த்திருக்கிறார்கள்!

இன்னுமொரு கண்ணராவி! பிரதிநிதிகள் சபை, அல்லது செனேட் சபை [அல்லது ஏதாவதொரு சபை] இடையில் முறிவில்லாமல் தொடர்ச்சியாக ஒரு கூட்டம் நடத்தும்போது அதை ஒரு 'ஸிட்டிங்' என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். இதற்கு தமிழ் என்ன தெரியுமா? ஸிட்' என்றால் உட்கார், அமர் என்றுபொருள். ஆகையால் 'ஸிட்டிங்' — 'அமர்வு' என்று சொல்லுக்குச் சொல் சரியான மொழி பெயர்ப்பு தரப்பட்டிருக்கிறது!

சொல்லுக்கு சொல் மொழிபெயர்ப்பில் விரஸ பாவத்தின் சிகரமணியாக விளங்குவது, 'முண்டக் கூவல்'. 'ட்றங்க் கோல்' என்ற ஆங்கிலத்தை இப்படி மொழி பெயர்த்தவரிடத்தில் எமக்குஉண்மையில் பரிதபம் உண்டாகிறது. ஏன் தெரியுமா?

டெலிபோன் என்றாலே 'தொலைபேசி' என்றுவைத்து விட்டார்கள் 'ட்றங்க் கோல்' என்றால் 'தொலை தொலை பேச்சு' என்றல்லவாமொழிபெயர்க்கவேண்டும். பார்த்தார் மனிதர். 'ட்றங்க்' என்றால் தலையில்

## புதுச் சொல் புனைதல்

லாத முண்டம் என்றல்லவா அர்த்தம். உடனே 'முண்டக் கூவல்' என்று கூவித்தள்ளி விட்டார்!

நல்லவேளை இந்தப் பெருமகனார் 'ஹலோ' என்பதற்கு 'எடே' என்று மொழி பெயர்க்கமறந்துவிட்டார்!

கடிதம் என்ற எளிமையான, இலகுவான, விளக்கமான தமிழ்ச் சொல்லை மாற்றி 'முடங்கல்' என்ற பயங்கரமான வார்த்தையை விரும்புகிறவர்களிடம் இதையும் எதிர்பார்க்கலாம், இன்னமும் எதிர் பார்க்கலாம்.

அரசாங்கத்தின் பிரதிநிதியாக ஒரு மாவட்டத்தில் அரச பரிபாலனம் செய்பவர் 'கவண்மேன்ட் ஏஜென்ட்'. இவரை நமது தொன்மக்கள் அன்போடு 'ஏசெண்டு துரை' என்றழைத்தனர். சுத்த தமிழை விரும்பி பின்பு இவரது பெயர் 'மாவட்ட அதிபர்' ஆனது. இத்துடன் விட்டோமா? வந்தாரையா நமது 'கிறுக்' மொழிபெயர்ப்பாளர்! தமது வல்லமையைக் காட்டப் புறப்பட்டார். உடனே 'மாவட்ட அதிபர்' தன் நாமம் கெட்டார். 'முகவர்' ஆனார்! உங்களுக்கு இது புரிந்ததோ புரியவில்லையோ, மொழிபெயர்ப்பாளர் ஒரு புதிய தமிழ்ச் சொல்லைக் கண்டு பிடித்து தமது தனித்தன்மையை நிலை நாட்டி விட்டார்.

மொழிபெயர்ப்பு சுகமாக, இலேசாக, தானாக வர வேண்டும். அதைக் கண்டவுடன் மக்கள் அது இன்னதைத்தான் குறிக்கின்றதென்று சுலபமாக புரிந்து கொள்ள வேண்டும். அது வலோத்காரமாக, குறைமாதப்பிள்ளைக்கு 'சிஸேரியன் ஒப்பரேஷன்' செய்தது போல வரப்படாது. அதைக் கண்டவுடன் மக்கள் நிலை குலைந்து மனம் தடுமாறி அது எந்த அகராதியில் இருக்கிறதோ என்று அங்கலாய்க்கப் படாது. மூலச் சொல்லின் உள் அர்த்தம் ஸ்பஷ்டமாக தெரியும்படி மொழிபெயர்க்க வேண்டும். மொழி பெயர்ப்பாளர் பரந்த நோக்குடன் நிறைந்த பொது அறிவுடன் மக்களுக்கு மயக்கம் ஏற்படா வண்ணம் மொழி பெயர்க்க வேண்டும். சொல்லுக்கு சொல் அப்படியே அடுக்காக மொழி பெயர்த்து விட்டால் விஷயம் முடிந்து விடாது. அதற்காக மக்கள் முன் பின் கண்டும் கேட்டுமிராத சொற்களை புனையவும்படாது.

(இன்னும் வரும்)

— வி. என். பி. —

## தென்னைப் பிள்ளை

[4-ம் பக்கத்தொடர்ச்சி]

அடி X அரை அடி குழிகள் பறிக்கவும். ஓராண்டுக்கு மேல் பிள்ளைகள் வைத்திருக்க வேண்டுமானால்குழிக்கு குழி சுமார் ஒன்றரை அடி வரையிலான இடைவெளி விடவும். மற்றநிலத்தைவிட மணற்பாங்கான நிலத்தில் சற்று நெருக்கமாகநடலாம். ஓர் ஆண்டுக்குமேல் பிள்ளைகளை வைத்திருக்க வேண்டுமானால் சுமார் 11 யார் அல்லது 15 யார் இடைவெளி விடவும்.

விதைகளை செங்குத்தாகவோ படுக்கையிலோ நடலாம். படுக்கைவாக்கில் நட்டால் மட்டையின் மிக அகன்ற பகுதி மேற்புறமாக இருக்கும்படி நடவும். மழை தொடங்குமுன் நடவேண்டும். அப்படி நட்டால் முளைப்பு நன்றாக இருக்கும். விதைக்குமுன் விதைக்காயை நன்கு கவனித்துப் பார்க்கவும், வரண்டவிதைகளை நடவேண்டாம். அழுகின விதைகளை நடவேண்டாம். கரையின் பூமியினால் விதைக்காய்களை டி. டி. டி. அல்லது பி. எச் ஸி. கரைகளில் [கரையக்கூடிய பொருள் ஒரு ராத்தல் 25 கலன் தண்ணீரில்] நனைத்து நடவும். ஆடு, மாடு வராமல் வேலி போடவும். மணற்பாங்கான பூமியில் மழை காலம் நின்றதும் இலை தழைகளைப் பரப்பி வைக்கவும். நிழல் உள்ள தோட்டத்தில் இது அவசியமில்லை. மணற்பாங்கான நிலமானால் கோடையில் ஒருநாள் விட்டு

## உங்கள் இராசி பலன்

பண்டித வித்துவான்

எம் வி. பாலசுந்தரம் பீ. ஓ. எல். எப். ஆர். ஏ, எஸ்.

**மேடம்**

இவ்வாரம் மத்திமபலன் தரும் வாரமாகும். தேகாரோக்கிம் சிறிது பாதிக்கப்படும். செலவுகள் கட்டுக் கடங்காது போகும். கடன் படவேண்டி வரலாம். இனபந்துக்களினால் தொல்லைகளும் உண்டு. தொழில்முறை

## 40 துப்பாக்கிச் சன்னங்களை சாப்பிட்ட வேட்டைக்காரர்

அவர் ஒரு பிரபல வேட்டைக்காரர். ஆனால் சுகவீனம் யாரை விட்டது. அப்ன்டிஸைடின் என்ற வியாதி அவரைப் பீடித்தது. சத்திரசிகிச்சைசெய்வதைத் தவிர வேறு வழியில்லையென்றார் டாக்டர்

சத்திரசிகிச்சை செய்த டாக்டர் வயிற்றினுளிருந்து 40 துப்பாக்கிச் சன்னங்களை கண்டெடுத்தார்.

இந்த வேட்டைப் பிரியர் தாம் சுட்டு வீழ்த்திய மிருகங்களைப் பார்த்துப் பாராமல் உட்கொள்ளும் வழக்கமுடையவராக இருந்ததால்தான் மிருகங்களின் உடலுக்குள் பாய்ந்த சன்னங்கள் இவரது வயிற்றுள் சேகரிக்கப்பட்டிருந்தனவாம்.

### இளமங்கையின்

## 3500 ஆண்டுகளுக்கு முந்திய சடலம்

சோவியத் டாக்டர் ஒருவர் விசித்திரமான வைத்தியப் பரிசோதனை ஒன்றை நடத்தினார். இந்த டாக்டர் பரிசோதித்தது 3500 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்து இறந்த ஒரு இளம் பெண்ணின் சடலம்.

இந்த நூற்றாண்டின் திருப்பத்தில் இந்த எகிப்து மங்கையின் சடலம் ரஷ்யாவுக்குக் கொண்டுவரப்பட்டது. இந்த மங்கை இறப்பதற்குக் காரணமான வியாதியை இந்த டாக்டர் ஆராய்ந்தார்.

## யாத்திரைக் கடிதங்கள்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

மிட்டிருந்தது. சென்னையிலிருந்து வந்த எங்களைக்கண்டதும் அவர்களுக்கு மிக உற்சாகம்.

கடல்நீரை எடுத்துக்காய்ச்சினர். பிரிட்டிஷ்ஆட்சியைக் கண்டித்துப்பலர் பேசினர். ஆனால் ரகசியப்பொலிசார் பலர் இருந்தும், ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாலைவரை அங்கிருந்துவிட்டு பின்னர் சென்னைக்குத் திரும்பி, பத்திரிகைக்குச் செய்தியைக் கொடுத்தேன். வேறெந்தப் பத்திரிகையிலும், அங்கு நடந்த சத்தியாக்கிரகத்தைப் பற்றி செய்தி வெளியாகவில்லை.

பிற பத்திரிகையில் வெளியாகாத ஓர் உண்மைச் செய்தியை வெளியிட்டு விட்டால் அது பத்திரிகைக்காரருக்குப் பெரிய வெற்றி. இது எவ்வளவு திருப்தியளிக்கும்தெரியுமா? சைக்கிளிலிருந்துகீழே விழுந்து, வேறு சங்கடங்கள் பட்டதையும் இந்தத் திருப்தியில் மறந்துவிட்டேன்.

இப்படி தேசீய விடுதலைப் போராட்டத்துடன் பத்திரிகைப் பணியும் இணைந்து இணைந்து வாழ்க்கை யாத்திரை மிக உற்சாகமாகச் சென்று கொண்டிருந்தது.

விடுதலைப் போராட்டத்தின் பிரசார அரங்கமாகவே பத்திரிகைத்தொண்டு இருந்ததேயன்றி, அது ஜீவனத்துக்கான ஒரு தொழிலாக இல்லை. பிரசாசம் அவர்கள் தலைமையில் நடக்கும் பத்திரிகையை அரசாங்கம் இப்படி விட்டுவைக்குமா? பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தவேண்டுமாயின் 5000 ரூபாய் பிணை கட்ட வேண்டுமென்று உத்தரவு வந்தது. நன்னடத்தை ஜாமீன் பணம் கட்டி பத்திரிகையை நடத்துவதைவிட, அதை மூடிவிடுவதே சுயமரியாதையாகுமென்று கருதி அன்றே 'ஸ்வராஜ்யா' பத்திரிகை ஸ்தாபனத்தை மூடி விட்டார்கள். மீண்டும் வேலையில்லாக் கஷ்டம். என்ன செய்வது?

உன் அன்புள்ள,

அப்பா.

## ரூ. மூன்றரை கோடி செலவில் குப்பைக்கிடங்கு!

ஐரோப்பாவிலேயே மிக அதிசயமான குப்பைக் கிடங்கு மேற்குஜெர்மனியில் அமைக்கப் பட்டிருக்கிறது. இக் குப்பைக் கிடங்கை அமைக்கச் செலவழிக்கப் பட்ட பணம் மூன்றரைக் கோடி ரூபாய்! அப்படி என்ன அதிசயமான குப்பைக் கிடங்கு என்கிறீர்களா? அணுக்கதிர் பற்றிய ஆராய்ச்சிகளின்போது சேருகிற குப்பைகள், பிறருக்கு ஆபத்து விளைவிக்கும் என்பதால், அவற்றை ஒரு விசேஷமான குப்பைக் கிடங்கில் போட்டுமூட ஏற்பாடு செய்கிறார்கள். இந்தக் கிடங்குக்குத்தான் இவ்வளவு செலவு.

## இலக்கியச் சந்திப்பு

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

போன்றவைகளைக் கொண்டு தான் கணிக்கப்படுகின்றன. எனவே "வாழ்க்கை விளக்கம்தான் இலக்கியம்" என்ற உண்மையைக் கொண்டு பார்த்தால் வாழ்க்கை முறைகள், பண்பாடு ஆகிய வற்றைப் பிரதிபலிக்கக் கூடிய இலக்கியத்துக்கும், அதே வாழ்க்கைத்தரம், பண்பாடு

தமிழ் வாசகர்களும் சிங்கள இலக்கியம்பற்றி அறிய வாய்ப்பில்லாதவர்களாயிருக்கிறார்கள். இந்த அனுகூலமற்ற நிலைமாற என்ன செய்ய முடியுமென்றுகருதுகிறீர்கள்?

பதி: இது நிச்சயம் கவனிக்கவேண்டிய காரியமாகும். சிங்களவாசகர்கள், தமிழ் வாசகர்கள் முறையே தமிழ், சிங்கள இலக்கியப்


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மூன்றே மாதத்தில் இலக்கண முறையில் ஆங்கிலம் கற்றுக்கொள்வதற்கு வகுக்கப்பட்ட நூல் Rs. 1-50, P. V. D. ஞானராஜ், த. பெ. எண் 357, கொழும்பு. 1895

உழவுயந்திரம்:

நல்ல நிலைமையில் 22 ஸ்ரீ 8000 தொடர்பிலக்கமுள்ள (Massey Ferguson-35) உழவுயந்திரம் விற்பனைக்குண்டு. M. M. T. P. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2458

தென்னந் தோட்டம்!

பூநகரி மெயின் வீதியில் பரம்பன் கிராயிலிருந்து 1 1/2 மைல் தூரத்தில் மேற்குப் பகுதியில் வெட்டுக்காடு என்ற இடத்தில் 23 ஏக்கர் காட்டுடன் கூடிய 30 ஏக்கர் பலனளிக்கும் தென்னந் தோட்டம் (மொத்தம் 53 ஏக்கர்) விற்பனைக்குண்டு. தோட்டம் வரைக்கும் வாகனங்கள் போகக் கூடியவசதியுள்ளது. மற்றும் விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். இல. 59, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 2452

### தேவை

விற்பனையாளர்:

யாழ்ப்பாணப்பகுதி சாராயத் தவறணைகளுக்கு இரண்டு விற்பனையாளர் தேவை. தமிழ் S. S. C. சித்தி அடைந்து இருக்க வேண்டும். ரொக்கப்பிணை ரூபா 1000/- கட்டவேண்டும். அதோடு எங்களுக்குத் தெரிந்த பெறுமதியான ஒருவரின் நேர்முகப்பிணையும் வேண்டும். விருப்பமானவர்கள் கீழ்க்காணும் விலாசத்துக்கு நேரில் வரவும். S. R. கந்தையா. No. 10, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 2459


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் நின்றதும் இலை தழைகளைப் பரப்பி வைக்கவும். நிழல் உள்ள தோட்டத்தில் இது அவசியமில்லை. மணற்பாங்கான நிலமானல் கோடையில் ஒருநாள் விட்டு ஒருநாள் பாசனம் செய்யவும். தோட்டம் முழுதும் வெள்ளமாக பாய்ச்சுவது நல்லது. மழைகாலத்தில் வெகுநாட்கள் மழைஇல்லா விட்டாற் பாசனம்செய்ய வேண்டும். முறையாக களை எடுக்கவும்.

பிள்ளைகளுக்கு எரு இட வேண்டாம். எருவிட்டால் பிள்ளைகள் எவை நல்லவை என்று பொறுக்குவது கடினம்.

பிள்ளைகளைச் சுற்றி கறையான் பிடித்தால் அரை அடி மண்ணைத் தோண்டி டி. டி. டி. 15 சதவிகிதம் பி. எச். சி. 10 சதவிகிதம் மருந்தை தூவி மூடவும். மேலும் கறையான் பிடித்தால் இதேபோல் மருந்து தூவிமூடவும். இப்பராமரிப்புகள் மூலம் நல்ல பிள்ளைகளை வளர்க்கலாம்.


12%

மாச வட்டி

கொடுக்கப்படும்.

அருணு ஏஜென்ஸீஸ்

அளவெட்டி.

2348


பண்டித வித்துவான்

எம் வி. பாலசுந்தரம் பீ. ஓ. எல். எப். ஆர். ஏ, எஸ்.

ரோக்கிம் சிறிது பாதிக்கப்படும். செலவுகள் கட்டுக்கடங்காது போகும். கடன் படவேண்டி வரலாம். இனபந்துக்களினல் தொல்லைகளும் உண்டு. தொழில்முறையில் பல இடைஞ்சல்கள் உண்டு. சத்துரு தொல்லையுண்டு. காரியம் சிறிது தாமதமாகவே கைகூடும்.

**இடபம்**

இவ்வாரம் நற்பலன்களைத் தரும் வாரமெனலாம். சந்தோஷகரமாகவே குடும்பத்தில் பல காரியங்கள் கைகூடும். தேகசுகம் நன்ருகவே காணப்படும். குடும்பத்தில் மன மகிழ்வுண்டு. வியாபாரம் இலாபகரமாகவே நடைபெறும். அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொதுவாகக் காரியத்தடையுண்டு.

**மிதுனம்**

இவ்வாரம் மத்திமபலன்களைத் தரும் வாரமெனினும் காரியங்கள் அனுகூலமாகவே கைகூடும். தேகநலம் பாதிக்கப்படும். பெண்களின் கொண்டாட்டத்தினுல் அவமானம் ஏற்படலாம். மன உறுதியோடு வாழவும். குடும்ப சுகம் உண்டு. பணவரவு தேவைக்குண்டு. சந்தோஷமாகவே பொதுவாகப் பலர் மத்தியிலும் காணப்படுவார்கள். பகைவர்கள், வீண் வாக்குவாதங்களுக்கு இடமளிக்காது நடக்கவும்.

**கடகம்**

இவ்வாரம் இன்னல்பல தரும் வாரமாகும். விரோதிகளின் தொல்லையுண்டு. பொருட்செலவும் பற்ருக்குறைவினுல் கடன்படலுமுண்டு. வியாபாரிகளுக்குச் சிறிது லாபமேற்படும். மனைவியால் சுகமுண்டு. காரியங்கள் பொதுவாக வழக்கு வகையிலுள்ளார்க்கு அனுகூலமடையும். பொன்வியாபாரம் இலாபகரமாகவே நடைபெறும்.

**சிங்கம்**

இவ்வாரம் சிறந்த பலன்களைத் தரும் வாரமாகும். கமத்தொழிலில் நஷ்டங்கள் உண்டாகும். தேகாரோக்கியம் சிறிது பாதிக்கப்படும். சிலருக்குத் திரவிய இலாபமேற்படும். காரியங்களில் வெற்றியடைவார்கள். இருதய நோயாளர்களுக்கு இவ்வாரம் கவனம் வேண்டும். உத்தியோகத் துறையினருக்குப் பல நன்மைகளுண்டாகலாம். வியாபார வகையினருக்கு இலாபமுண்டு.

**கன்னி**

இவ்வாரம் மத்திம பலன்களைத் தரும் வாரமெனலாம். தேகாரோக்கியம் சிறிது பாதிக்கப்படும். தொழில்வகையில் நட்டமேற்படும். பல கஷ்டங்கள் உத்தியோகத்தர்களுக்குண்டாகலாம். குடும்பத்தில் அடிக்கடி பல தொல்லைகள் உண்டு. கொடுக்கல்வாங்கல்களினுல் தொல்லைகளுண்டாகிப் பின் தீர்வு காணும். கணவன் மனைவியரிடையே பரஸ்பரஅன்புண்டு. நண்பர்களினுல் உதவிப்பேறுண்டு.

**துலாம்**

இவ்வாரம் தொல்லைகள் பல தரும் வாரமெனிலும் நன்மையாகவே காரியங்கள் நடைபெறும். தொழில் நிலைக் கேடுண்டெனினும் தொழில் சமபலிதமடையும். தேகசுகம் நன்ருகவே காணும். வியாபாரம்விருத்தியடையும். மன அமைதி குலையும். தொழில் வகையில் மாற்றமடையும். பொருள் பற்ருக்குறைவுண்டு. தேவ வழிபாடியற்றவும்.

**விருச்சிகம்**

குடும்பத்தில்கலகம்உண்டு. பொருட்சேதமுண்டு. வியாபாரிகளுக்கு வியாபாரம் நஷ்டமடையும். உடலாரோக்கியம் நன்ருகவே இருக்கும். வயிற்றில்ரோகம் கொடுக்கல் வாங்கல்களில் சிறப்பு உண்டு.

**தனு**

இவ்வாரம் மிக்க கஷ்ட பலன்களைத் தரும் வாரமென்றேசொல்லவேண்டும். விரோதிகளின் தொல்லையால் வேதனைப்படுவார்கள். தேகாரோக்கியம்சாமானியமாகவே காணும். நண்பர்களிடையே கலகம் தோன்றி மறையும். பொருள்செலவு உண்டு. பணமுடையுண்டு. அரசர் பயமுண்டு. தேவ தரிசனம் மேற்கொள்ளவும்.

**மகரம்**

இவ்வாரம் சிறந்த பலன்களைத் தரும் வாரமாகும். இரத்தின வியாபாரிகளுக்கு திரவிய இலாபம் உண்டு. வழக்குவகையில் வெற்றியேற்படும். தேகசுகமுண்டு. பகைவர் தொல்லைகளுண்டாகும். காரியானுகூலம் உண்டு. உத்தியோகவகையினருக்கு பல முன்னேற்றப் பாதைகள் திறபடும்.

**கும்பம்**

இவ்வாரம் தொல்லைதரும் வாரமாகும். சொறி வியாதியால் வருந்துவர். பல நஷ்டங்களுமுண்டாம். எக்கஷ்டமும் சாமானியமாகவே சமாளிக்கப்படும். குடும்பத்தில் அமைதி குலையும். வியாபாரம் மந்த நிலை காணும். உத்தியோகத்தர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

**மீனம்**

இவ்வாரம் நற்பலன்களைத் தரும் வாரமாகும். தொழிலில் மாற்றமுண்டாகும். தேகசுகம் சிறிது பாதிக்கப்படும். சந்தோஷமான கருமங்கள் குடும்பங்களில் நடைபெறும். வியாபாரிகளுக்கு பெரும் இலாபமேற்படும். வழக்கு வகையினருக்கும் போட்டிகளில் ஈடுபாடுடையோர்களுக்கும் ஜயமுண்டாகும். கமத்தொழிலாளர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் மிக நல்லபலன் உண்டு.


“லேடன்”

LEYDEN

தயாரிப்புக்கள்

- பெனியன்
- ஸ்போட் சேட்
- ரி சேட்
- ரெறி சேட்
- ரெறி பிளவுஸ்
- பேபி வெஸ்ட்
- கால் மேஸ்

(Nylon & Cotton)

லேடன் காமென்ஸ்

74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

போன்: 330


## இரைச்சலிலிருந்து விடுதலை

‘அப்பப்பா என்னஇரைச்சல்’ என்று அவஸ்தைப்பட்டுக்கொள்ளும் சமயத்தில் இந்தஇரைச்சலிலிருந்துவிடுதலைதேடித்தர புதிதாக ஒரு கருவியைக் கண்டுபிடித்திருக்கிருர் சோவியத் என்ஜினியர் ஒருவர். இந்த புதிய கருவியைக் காதில் மாட்டிக்கொண்டால் போதும் இந்த விண்ணே அதிர்ந்தாலும் ‘அமைதியாக’ இருக்கலாம்.

ஆராய்ச்சிகளின்போது சேருகிற குப்பைகள், பிறருக்கு ஆபத்து விளைவிக்கும் என்பதால், அவற்றை ஒரு விசேஷமான குப்பைக் கிடங்கில் போட்டுமூட ஏற்பாடு செய்கிருர்கள். இந்தக் கிடங்குக்குத்தான் இவ்வளவுசெலவு.

# மணிபல்லவத்து மரகதப் பூ!

—தமிழ் நாடன்—

எண்ணும் பொழுதென் னிதயத் தெழும்பும்இனியசுகம்
விண்ணும் பெறுமோ? நயினைக்கொடியே! விதம்
விதமாய்க்
கண்ணுங் கருத்துங் களிக்கு மியற்கைக் கவினழகை
உண்ணும் பொழுதுன் னெழிலுரு வன்றோ வுணருவனே!

கருணைப் பொலிவுங் கசிவுறு சிந்தையுங் கைகடந்து
தருணத் துதவி யளிக்குந் தயையும் தகவுமந்தக்
கரணத்தொளியும் நிரம்பியஅன்னையர்க் காணுதொறும்
நயினைத் திருவே! நினைக்கண்டு நல்லருள் நாடுவனே!

பாவுக் குருகும் பராசக்தி! பார்ப்பதி யேநயினு(ர்)
தீவுக் கெழிலைத் திருவருள் பாலிக்கும் தேனேயென்புன்
நாவுக் கழகை நயந்தருள் நாயகி! நற்றமிழின்
பாவுக் கொருபுத் தொளியூட்டி நின்னைப்பரவுவனே!

பாலிற் கழுவிய வெண்மணற் பாங்கர் பரிவு கொண்டு
வேலிற் படைத்த விழிமலர் பாவாய்! விளங்குபல
நூலிற் கிடைத்த சிறுசரக் கென்ன நொடித்தது? உன்
காலைப் பிடித்தபின் பேயுட் களங்கம் கழன்றதுவே!

தாலிக் கொடிக்கு வழியுற்ற வுன்வரன் தானணியும்
நீலக் கருவிட நாகத்தை மங்கல நாணெனவே
வாலைக் குமரி யுனக்கணிந் தான்பே ரிமயம்வளர்
நீலக் குயிலே! நிறைதவக் காதற் பரிசிதுவோ?

சாவை யுமிழுங் கருநாக பாம்புறு சஞ்சலத்தைச்
சாக வடித்த பெருங்கரு ணைத்திறன் சாயுச்சிய
போக மெனக்களிக் காதென வாடுதல் போக்கணமே
வேக வுடலை விடமுன் விரும்பிய தந்தருளே!

மணிபல் லவத்து மரகதப் பூவுன் மணிவயிற்றிற்
கனியு முலகுயிர் காணும் பிணிதுயர் நல்குரவு
வினையின் விளைவெனில் மன்னித் ததனைநீ வாங்கி
யுண்டு
இனியுந் துயரடை யாவணம் இன்னருள் ஈயுதியே!

மகப்பே றழிக்கும் மருந்து மனிதர் மலியுலகில்
மகப்பே றளிக்கும் திருவருள் நீயன்றி மற்றிலையே!
இகப்பே றுவக்கும் உலகம் நினது நெறியிகந்து
சுகப்பே றடையத் துடித்தல் வெளிறிய சோற்றறிவே!

மண்ணியல் தேர்இது! விண்ணின் றிழிந்ததுவோ?
புதுமை!
பண்ணவன் பாவை பவனி வரும்பொன்
ரதமெனத்தேர்!
கண்ணுதல் கண்ணுதல் பெற்றதன் காரணந் தேர்!
இதனிற்
புண்ணியை ஓலக்கம் காணுத கண்பெரும்
புண்ணலவோ!

கோயிலுட் தீர்த்தக் கிணறென வுள்ளம் ஒடுங்கிப்
பொறி
வாயில் விரிந்தத ஞல்வந்த தாபத்து. வாழ்க்கைசிறு
நாயிற் கடையதாய் விட்டதுவே! நாக பூரணியே!
பேயிற் கலக்கமுன் பேணுதி யென்னைப் பெரியவளே!

பார்த்தால் வாழ்க்கை முறைகள், பண்பாடு ஆகியவற்றைப் பிரதிபலிக்கக்கூடிய இலக்கியத்துக்கும், அதே வாழ்க்கைத்தரம், பண்பாடு ஆகியவற்றினைக் கொண்டு கணிக்கப்படும் இலக்கியத்துக்கும் நிச்சயம் சம்பந்தம் இருந்தேயாகவேண்டும். சரியாகச் சொல்வதானுல், மனதில் ஒரு நல்லிலக்கியப்பின்னணியுள்ளவர்களுக்குத்தான் நாட்டுப்பற்று அதிகம் இருக்கும். சரித்திரத்தை எடுத்துப்பார்த்தால் பல நாடுகளில் நாட்டு முன்னேற்றத்துக்காக வாழ்ந்து மடிந்த தலைவர்களில்பெரும்பாலானவர்கள் கணிசமான அளவு இலக்கியப் பரிச்சயம் உள்ளவர்கள் என்பதை அறிந்துகொள்ளலாம். இதற்கு எடுத்துக்காட்டாக லெனின், சர்ச்சில் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

“வாழ்க்கை விளக்கம்தான் இலக்கியம்” என்ற உண்மையை ஒப்புக்கொள்ளாதவர்கள் இருக்கும்வரை “நாட்டுப் பற்றுக்கும் இலக்கியத்துக்கும் சம்பந்தம் உண்டா?” என்ற சந்தேகமும் இருந்துகொண்டேயிருக்கும்.

கேள்: தங்களைக் கவர்ந்த பிறமொழி இலக்கியகர்த்தாக்கள் என்று யாரைச் சொல்வீர்கள்? மேல்நாட்டு இலக்கியங்களில் காணப்படும் உருவம், உத்தி ஆகியவற்றை அனுசரித்து நாமும் இலக்கியம் படைக்கலாமா?

பதி: “வாழ்க்கை விளக்கம்தான் இலக்கியம்” என்ற உண்மையை அனுசரித்து பிரமிக்கத்தக்க வகையில் நாவல்களையும் சிறுகதைகளையும் எழுதிக் குவித்த டால்ஸ்டாய், செக்காவ், கார்க்கி போன்ற ரஷ்ய இலக்கிய இராட்சதர்களையும், சொமர்செட்மோம், தாகூர் ஆகியோரையும் எனக்கு நிரம்பப் பிடிக்கும். செக்காவ், கார்க்கி போன்றவர்களின் எழுத்துக்களை நினைத்தாலே படபடப்பு ஏற்படுகிறது, அவைகளெல்லாம் தங்கச் சுரங்கங்கள்.

எமது பண்பாட்டின்-வாழ்க்கை முறையின் பிரதிபலிப்புச் சிதைந்துபோகாமல், எந்த இலக்கிய முறைகளையும் அனுசரித்துப் புதிய பாணியில்இலக்கியம்படைப்பதில் தவறு இருக்கமுடியாது. அது வரவேற்கப்படவேண்டிய காரியம்.

கேள்! நல்ல தரமான நம் நாட்டுத் தமிழ் நாவல், சிறுகதைகள் பற்றிச் சிங்கள வாசகர்கள் ஏதுமறியாமலிருக்கின்ருர்கள். இதேபோல

கிறீர்கள்?

பதி: இது நிச்சயம் கவனிக்கவேண்டிய காரியமாகும். சிங்களவாசகர்கள், தமிழ் வாசகர்கள் முறையே தமிழ், சிங்கள இலக்கியப் படைப்புகளை அனுபவிக்க முடிந்தால்தான் இந்த இரண்டு சகோதர சமூகங்களும் காலாசாரப் பரிவர்த்தனை செய்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். சிங்களப் படைப்புகள் தமிழிலும், தமிழ்ப்படைப்புகள் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்படவேண்டும். தமிழிலிருந்து நேரடியாகச் சிங்களத்துக்கோ, சிங்களத்திலிருந்து நேரடியாகத் தமிழுக்கோ மொழிபெயர்த்துக் கொள்ளும் வல்லமையுள்ளவர்கள் மிகக் குறைவென்றுதான் சொல்லவேண்டும். எனவே சிங்கள, தமிழ்இலக்கியப் படைப்புகளை இயலுமானவரையில்ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக்கொண்டால் பின்பு அவைகள் ஆங்கிலஅறிவுபடைத்தவர்களது உதவியினுல் சாதாரண சிங்கள, தமிழ் வாசகர்களுக்கு உரியமொழியில் கிடைப்பதற்குவழியுண்டு. எனவே இம்முயற்சியில் சிங்கள, தமிழ் எழுத்தாளர்கள் இருசாராரும் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

இத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளுவதில் நல்ல இணக்கமும் ஒத்தாசையும் ஏற்பட சிங்கள, தமிழ் எழுத்தாளர்கள் அடிக்கடி இலக்கியச் சந்திப்புக்களை ஒழுங்குசெய்துகொள்ள வேண்டும். அவை நிச்சயம் பயனளிக்கும்.


BAND

பாண்ட்வாத்தியம்

உங்கள் வைபவங்களுக்கு மேளம், கதிரைகள் தற்போது கீழ்க்காணும் விலாசத்தில் கிடைக்கும்.

யாழ். பாண்ட் வாத்தியம்,
191, ஆஸ்பத்திரி வீதி,
2344 யாழ்ப்பாணம்.



சேவை

உல்லாசப்பிரயாணிகளே!

உல்லாசப் பிரயாணங்கள் ஒழுங்கு செய்வதற்கு நம்பிக்கையான ஸ்தாபனம்

அருணு

ஏஜென்ஸீஸ்,

அளவெட்டி.

2316


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோஸிஜின் - ஜோன்சன் சந்திப்பு
# மேற்கு ஆசிய நெருக்கடி

மேற்கு ஆசிய நெருக்கடி இன்னும் முற்றாக நீங்கிவிடவில்லை. ஓய்ந்திருக்கும் யுத்தம் நிரந்தர அமைதிக்கு வழிவகுக்குமா என்பதுகூட இன்றுள்ள நிலையில் கேள்விக் குறியாகத் தானிருக்கிறது. இச்சமயத்தில் சீனாவும் இந்தியாவும் நடத்தும் ''ராஜதந்திரபோர்'' எந்த அளவில் போய் நிற்கும் என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

மேற்கு ஆசியாவில் இஸ்ரேல் - அரபுநாடுகள் யுத்தம் ஆறே நாட்களில் முடிந்துவிட்டதெனினும் யுத்தம் முடிந்துவிட்டதாகச் சொல்லமுடியாது. ஆறு நாள் யுத்தத்திலும் இஸ்ரேல் வெற்றியீட்டியிருக்கிறது. ஐக்கிய அரபுக்குடியரசில் சூயஸ்கால்வாயின் ஒரு புறக்கரையை அது தன் வசப்படுத்தியிருக்கிறது. சிரியாவில் சில பகுதிகளையும் ஜோர்டானில் பழைய ஜெருசலம் நகர் உட்பட மற்றும் சில பகுதிகளையும் அது கைப்பற்றியிருக்கிறது. அரபு நாடுகளுக்கு இந்தயுத்தத்தினால் அதிக சேதம் ஏற்பட்டுள்ளது. யுத்தத்தில் ஏற்பட்ட தோல்வியினால் ஆத்திரமடைந்துள்ள அரபுநாடுகள் அடுத்துஎன்ன நடவடிக்கை எடுப்பதுஎன்பதுபற்றி தீவிரமாக ஆராய்ந்து வருகின்றன. அதிபர் பதவியை ராஜினமாச்செய்யமுன்வந்த நாஸர், அரபு மக்களின் வேண்டுகோளுக்கிணங்க பதவியிலிருக்க ஒப்புக்கொண்டதுடன் நாட்டின் அரசியலிலும் இராணுவத்திலும் பெரும்மாற்றங்களைச்செய்து வருகிறார். ஐக்கிய அரபுக்குடியரசின் ஒரேயொரு சட்டரீதியான கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டுள்ள நாஸர், ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் பதவியுடன் பிரதமர் பொறுப்பையும் ஏற்று 28 அங்கத்தவர்களைக்கொண்ட புதிய மந்திரிசபையையும் அமைத்துள்ளார். அரபுநாடுகள், இஸ்ரேல்மீது கொண்டுள்ள ஆத்திரத்தைவிட அமெரிக்க அதிபர் ஜோன்சன் மீதே அதிககோபம் கொண்டுள்ளன.

இஸ்ரேல்-அரபு யுத்தத்தின்போது இஸ்ரேலியருக்கு அமெரிக்க, பிரிட்டிஷ் போர் விமானங்கள் உதவிசெய்தன என்ற ஐக்கிய அரபுக் குடியரசின் குற்றச்சாட்டை

1956-ம் ஆண்டு சூயஸ் நெருக்கடியின்போதும் அரபு நாடுகள் சுமத்திய இதே போன்ற குற்றச் சாட்டை இப்போதுபோலவே பிரிட்டனும் அமெரிக்காவும் அன்றும் நிராகரித்தன. ஆயினும் பின்னர் அந்தக் குற்றச் சாட்டு, உண்மை என்பது உறுதியாயிற்று.

## ஐ.நா. வில் மேற்கு ஆசியா

யுத்தத்தில் தான் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து விலகிச் செல்லமுடியாது என

**ஓலை மேடை**

**எஸ். எம். ஜி.**

இஸ்ரேல் தெரிவித்துள்ளது. யுத்த நிறுத்தம் ஏற்பட்டதுடன் மேற்கு ஆசியாவில் நிரந்தர அமைதி நிலவ வேண்டுமானால் பழைய நிலைகளுக்கு இஸ்ரேலியப் படைகள் திரும்பிச்செல்லவேண்டுமென்று சோவியத் யூனியன் கூறுகிறது. ஆசிய-ஆபிரிக்க நாடுகளும் இதை ஆதரிக்கின்றன. இஸ்ரேல் படைகள் பழைய இடங்களுக்கு வாபஸ் பெறப்படவேண்டுமென்று ஐ. நா. பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து ஐ. நா. மகாசபையின் அவசரக் கூட்டத்தைக் கூட்ட சோவியத் யூனியன் கேட்டுக்கொண்டது. இக்கோரிக்கைக்கு பெரும்பான்மையான நாடுகள் ஆதரவளித்ததால் இப்போது மகாசபையின் அவசரக்கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இக்கூட்டத்தில் சோவியத் பிரதமர் கொஸிஜின் நேரடியாகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியிருப்பது மட்டுமல்லாமல், ''இஸ்ரேலை ஆக்கிரமிப்பு நாடு'' எனக் கண்டித்து ஆக்கிரமிப்புச்செய்த அரபு நாடுகளின் பகுதிக

டுமென்றும், ஆக்கிரமிப்பினால் அரபு நாடுகளுக்கு ஏற்பட்ட நஷ்டங்களுக்கு இஸ்ரேல் ஈடுசெய்யவேண்டுமென்றும்கோரும் ஒரு பிரேரணையையும் மகாசபையில் அவர்சமர்ப்பித்தார். மேற்கு ஆசியாவில் நிரந்தர யுத்த நிறுத்தம் ஏற்படவேண்டுமானால் ஆக்கிரமிப்புச்செய்யப்பட்ட பகுதிகளிலிருந்து இஸ்ரேலியப்படைகள் விலகவேண்டுமென்றும் ஆக்கிரமிப்பினால் கிடைத்தபயனை அனுபவிக்க முடியுமென்ற எண்ணம்நீங்கவேண்டுமென்றும் இல்லையேல் மேற்கு ஆசிய நெருக்கடி பெரிய யுத்தத்துக்கு வழிகோலுவது தவிர்க்கமுடியாதது என்றும் கொஸிஜின் எச்சரிக்கை செய்திருக்கிறார்.

சோவியத்பிரதமர்கொஸிஜினின் இந்த எச்சரிக்கையின் அர்த்தம் என்ன? மேற்கு ஆசியாவில் அரபு நாடுகளுக்கு சோவியத் யூனியன் இனி நேரடியாக உதவி செய்யமுன்வரும் என்பதுதான் இதன் அர்த்தமா அல்லது ஐ. நா.மகாசபையின் அவசரக்கூட்டத்தைக்கூட்டி அதில் நேரடியாகக் கலந்துகொண்டுஇத்தகைய ஓர் எச்சரிக்கையை விடுத்ததன்மூலம் அரபுநாடுகளின் ஆதரவை சோவியத் யூனியன் அதிகம் பெறமுடிவதுடன் அரபு நாடுகளுக்கு உற்சாகமூட்டவும் மேற்கத்திய வல்லரசுகளைப் பயமுறுத்தவும்முடியும் என்பது கொஸிஜினின் கருத்தா? ''பெரிய வல்லரசு யுத்தமாக மாறுவது தவிர்க்கமுடியாதது'' என்பது வெறும் மிரட்டலாக இருக்கமுடியாது.

கொஸிஜின் பேசிய பின் இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் சோவியத் யூனியனைக் கண்டித்துப் பேசுகையில் கொஸிஜினும்குரோமிக்

வும் சோவியத்யூனியன் அடுத்து என்ன செய்யும் என்பதற்கு ஒரு அறிகுறியா?

## அமெரிக்கா எதிர்ப்பது ஏன்?

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து இஸ்ரேல் படைகள் விலக்கப்படவேண்டுமெனக் கூறும் சோவியத் பிரதமரின் பிரேரணையை அமெரிக்கா நிராகரிப்பதாக அமெரிக்கப் பிரதிநிதி கோல்ட்பர்க் மகாசபைக் கூட்டத்தில் தெரிவித்துவிட்டார். படைகளை விலக்க வேண்டுமென்பதை அமெரிக்கா ஏன் நிராகரிக்கவேண்டும்?

இந்திய-பாகிஸ்தான் சண்டையின்போது சண்டையை நிறுத்தும்படி ஐ. நா. பாதுகாப்புச்சபை கோரியபோது இருதரப்புப் படைகளும் பழைய இடங்களுக்கு விலக்கப்படவேண்டுமென்றும் கோரியது. இக்கோரிக்கையை அமெரிக்காவும் பலமாக ஆதரித்தது. அந்தச் சண்டையில் பாகிஸ்தானுக்குள் இந்தியப் படைகளே வெகுதூரம் சென்றிருந்ததுடன், பாகிஸ்தானுக்கு அமெரிக்கா கொடுத்திருந்த ஆயுதங்கள் குறிப்பாக அமெரிக்க 'பேட்டன் டாங்கிகள்' பெருமளவில் இந்தியப் படைகளினால் சேதப்படுத்தப்பட்டிருந்தன. இஸ்ரேல்-அரபு யுத்தத்தில் நிலை அப்படியில்லை. ஐக்கிய அரபுக் குடியரசுவிடமிருந்த சோவியத் ஆயுதங்கள் அதிகம் சேதமடைந்திருக்கின்றன.

## சீன-இந்திய ராஜதந்திர நெருக்கடி
## எல்லையில் வெடிச் சத்தத்துக்கு அறிகுறி

அரபு நாடுகளின் பகுதிகள் தான் இஸ்ரேல்வசமுள்ளன.

இனி சூயஸ்கால்வாய் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் மேற்கத்திய வல்லரசுகளின் கப்பல் போக்குவரத்துக்கு முக்கியமான இடம். சூயஸ்கால்வாய் வழியாக தினசரி 60 கப்பல்கள் பிரயாணம் செய்கின்றன. இவற்றில் மேற்கத்திய கப்பல்களே அதிகம். மேற்கு ஆசியாவிலிருந்தே பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு எண்ணெய் செல்லவேண்டும்.

செய்வதன்மூலம் மேற்கத்திய நாடுகளின் கப்பல்கள் நன்னம்பிக்கைமுனை வழியாக சுற்றிச் செல்லவேண்டும். இதனால் ஒவ்வொரு கப்பலுக்கும் ஐயாயிரம் டாலர் மேலதிகச் செலவு ஏற்படும்.

இப்பொழுது இஸ்ரேல் படைகள் சூயஸ்கால்வாயின் கிழக்குக் கரையில் நிலைகொண்டுள்ளன. இப்பகுதியிலிருந்தும் இதர இடங்களிலிருந்தும் தாங்கள் வாபஸ் பெறுவதானால் சூயஸ்கால்வாய், அக்காபாவளைகுடா கப்பல் போக்குவரத்துக்கு எவ்வித தடையுமிருக்கக்கூடாதென்று இஸ்ரேல் கூறலாம். அக்காபாவளைகுடா, சூயஸ்கால்வாய் சர்வதேசப் போக்குவரத்துக்கு திறந்திருக்கவேண்டுமென்பதே அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் மேற்கத்திய வல்லரசுகளின் கோரிக்கை. எனவே இஸ்ரேலிய படைகள் வாபஸ் பெறுவதற்கு சூயஸ் கால்வாய் போக்குவரத்தை ஒரு நிபந்தனையாக வைத்துக்கொள்ளலாமென அமெரிக்காவும் மேற்கு வல்லரசுகளும் கருத்தில் கொண்டிருக்கலாம். இஸ்ரேல் இந்த நிபந்தனைக்கு இணங்கக்கூடும். ஆனால் ஜோர்டானில் கைப்பற்றிய பழைய ஜெருசலேம் நகரையும் அது இந்த நிபந்தனையில் ஒன்ருகச் சேர்த்துக்கொள்ளக்கூடும்.

அரபுநாடுகள் இதற்கு இணங்குமா?

இஸ்ரேலிய படைகள் பழைய இடங்களுக்கு விலக வேண்டுமென்பதை நிராகரிக்கும்அமெரிக்கா, மேற்கு ஆசியாவில் நிரந்தரஅமைதி நிலவுவதற்கு புதியயோசனை ஒன்றைத் தெரிவித்திருக்கிறது.

ஐ. நா. மகாசபையின் அவசரக்கூட்டத்தில் கலந்துகொள்ள சோவியத்பிரதமர் கொஸிஜின் நியுயோர்க் வந்திறங்கிய சமயம் பார்த்து அமெரிக்க அதிபர் திரு. ஜோன்சன் இந்தப் புதிய யோசனையை வெளியிட்டிருந்தார். அதில் முக்கியமானது வல்லரசுகள். மேற்கு ஆசிய நாடுகளுக்கு ஆயுதங்களை விநியோகிப்பது விற்பனைசெய்வதும் தடைசெய்யப்படவேண்டுமென்பதாகும்.

இஸ்ரேல்—அரபு யுத்தத்தின்போது இஸ்ரேலியருக்கு

### குள்ளநரித் தந்திரம்

விமானங்கள் உதவிபுரிந்ததாக நாஸர் குற்றம்சாட்டியதுடன் அமெரிக்கா, பிரிட்டனுடனான ராஜீய உறவைத் துண்டித்துக் கொள்ளவதாகவும் அறிவித்தார். இதைத் தொடர்ந்து சிரியா, அல்ஜீரியா, சூடான், லெபனன்போன்ற அரபு நாடுகளும் அமெரிக்காவுடனான ராஜீய உறவுகளைத் துண்டிக்கமுன்வந்தன. இது தவிர யுத்தத்தினால் அமெரிக்காவுக்கும் அரபுநாடுகள் அனைத்துக்குமே இதுவரையிருந்துவந்த உறவு சீர்குலைந்துபோயிருக்கிறது. இந்த யுத்தத்துக்கு முன் அமெரிக்காவிடமிருந்து ஆயுதஉதவி பெற்றுவந்த ஜோர்டான், சூடான், ஆகிய அரபுநாடுகளும் கூட இனி அமெரிக்காவிடமிருந்து ஆயுதஉதவி பெறமாட்டாவென்பது தெளிவு. சூடானுக்கு ஆயுத உதவி அளிக்க சோவியத்யூனியனும் செக்கோஸ்லவாக்கியாவும் உடனடியாக முன்வந்தன. எனவே மேற்குஆசியாவில் இனி அமெரிக்கா ஆயுதம் விற்கக்கூடிய ஒரேநாடு இஸ்ரேல்தான். இந்த இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஏற்கனவே போதிய நவீன ஆயுதங்களை வழங்கியிருக்கிறது. போதாக்குறைக்கு இஸ்ரேலிய கரையிலிருந்து 20 மைல் தூரத்தில் மத்திய தரைக்கடலில் அமெரிக்க ஆருவது கடற்படை அணி நெடுநாளாக நின்றுகொண்டிருக்கிறது. மேற்குஆசியாவில் இனி ஆயுதங்கள் விற்பனைசெய்வதானால் சோவியத் யூனியனுக்கும் கிழக்கு ஐரோப்பிறநாடுகளுக்கும்தான் சந்தர்ப்பம் இருக்கிறது. சீனவுக்கும் வாய்ப்பு இல்லாமலில்லை. சோவியத் யூனியன் அதற்குச் சந்தர்ப்பமளிக்குமா? ஆனால் அமெரிக்காவின் ஆயுதவிற்பனைத்தடையின் நோக்கம் தனக்கு இனி மேற்கு ஆசியாவில் ஆயுத விற்பனை செய்வதற்கு இடமில்லை என்பதாகத்தானிருக்கமுடியும்? இது என்ன தந்திரமோ?

### உச்சி மகாநாடு நடைபெறுமா?

சோவியத்பிரதமர் கொஸிஜின் அமெரிக்காவுக்கு வந்திருப்பதால் அமெரிக்கஅதிபர் ஜோன்ஸனும் கொஸிஜினும் சந்தித்துப் பேசக்கூடிய ஒரு உச்சிமகாநாட்டை நடத்த அமெரிக்கா திட்டமிட்டிருக்கிறது. ''நான் ஐ. நா. மகாசபைக்கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருக்கி-

றேன். அமெரிக்க அதிகாரிகளைச் சந்திப்பதற்கு அல்ல'' என்று கொஸிஜின் கூறிவிட்டபோதிலும் அமெரிக்க அதிகாரிகள் உச்சிமகாநாட்டுக்கான வாய்ப்பை இழந்துவிட முயற்சி செய்யவில்லை. அமெரிக்க ராஜாங்க அமைச்சர் டீன் ரஸ்க் வாஷிங்டனிலிருந்து நியுயோர்க் வந்து ரஷ்யவெளிவிவகார அமைச்சர் குரோமிக்கோவைச் சந்தித்துப் பேசியிருக்கிறார். ஐ. நா.மகாசபையில் சோவியத் பிரதமர் கொண்டுவந்த தீர்மானத்தையே அமெரிக்கா நிராகரித்திருக்கையில் கொஸிஜின்-ஜோன்ஸன் 'உச்சிமகாநாடு' நடைபெறுமா? கொஸிஜின் ஐ. நா. மகாசபையில் உரை நிகழ்த்தும் வரையிலாவது பொறுத்திருக்காமல் கொஜிஸின் வந்திறங்கியதுமே அதிபர் ஜோன்ஸன் தமது புதிய யோசனையை வெளியிட்டதும் கொஸிஜின் மாஸ்கோவிலிருந்து புறப்படுமுன்னரே, சம்பிரதாயமாக ஓர் அழைப்பை விடுத்து நியுயோர்க் வந்து சேர்ந்ததும் முதலில் சந்தித்துப்பேச, முயற்சி செய்யாது 'வந்த இடத்தில் சந்திக்க' முனைவதும் உச்சிமகாநாட்டுக்கான வாய்ப்பை ஏற்படுத்தக்கூடியதல்ல.

### சீனவும் இந்தியாவும்

சீனத்தலைநகரான பீக்கிங்கிலுள்ள இந்திய தூதரகத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரி உளவு வேலையில் ஈடுபட்டதாக சீன குற்றம்சாட்டியதும் அதைத்தொடர்ந்து இரண்டு அதிகாரிகளை வெளியேற்றியதும் அந்த அதிகாரிகள் செங்காவலரின் சித்திரவதைக்குள்ளானதைக் கண்டு புதுடில்லியில் சீனத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டமும் கைகலப்பும் நடைபெற்றதும் இதற்கு எதிராக பீக்கிங்கிலுள்ள இந்தியத் தூதரகத்தினுள் இந்திய தூதரகக் குடும்பங்களை வைத்து செங்காவலர் முற்றுகையிட்டதும் இதைத் தொடர்ந்து இந்தியாவும் 'முற்றுகை' நடவடிக்கை மேற்கொண்டதும் பழிக்குப் பழி, பதிலுக்குப்பதில்என்று சீனவும் இந்தியாவும்வரிந்து கட்டிக்கொண்டு ''ராஜதந்திர விளையாட்டு'' விளையாடியது வேடிக்கையாகவும், வேதனையாகவும் பெரியவர்களுக்கேற்ற பண்புள்ள செயலாக அல்லாததாகவும் தோன்றியது. எனினும் சிலருடன் இவர்

### கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், வியாழன் திருநெல்வேலி தலங்காவற்பிள்ளையார் கோவிலின் 5ம்நாள் உற்சவமான இன்று இரவு 9மணிக்கு நல்லைஞான சம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் ''விநாயக சஷ்டி'' என்னும் பொருள் பற்றிச் சங்கீதகதாப்பிரசங்கம்செய்வார்.

### சந்தித்தார்

நியூயோர்க், ஜூன் 21

இந்தியவெளியுறவு மந்திரி திரு. சாக்ளா, அமெரிக்க ராஜாங்க காரியதரிசி திரு. டீன் ராஸ்க்கை சந்தித்துப்பேச்சுவார்த்தை நடாத்தினர்.

### விஜை வந்துசேர்ந்தார்

புதுடில்லி, ஜூன் 21

விரும்பத் தகாதவரென்று வெளியேற்றப்பட்ட சீனவிலுள்ள இந்திய தூதரகத்தின் மூன்ருவது காரியதரிசி விஜை இந்தியா வந்துசேர்ந்துள்ளார். ஏற்கனவே சீனவிலிருந்து நாடுகடத்தப்பட்டு, இங்கு வந்துசேர்ந்த சீனத் தூதரகத்தின் 2-வது காரியதரிசி திரு. ரகுநாத்தைப் போலவே தானும் சீனவில் பலவிதமான இம்சைக்குள்ளாகியதாக அவர் தெரிவித்தார்.

விரும்பத்தகாதவர் என்று நாடுகடத்தப்பட்ட புதுடில்லியிலுள்ள சீனத்தூதரக மூன்ருவது காரியதரிசி தாயகம் புறப்பட்டுச்செல்லும் வழியில் ரங்கூன் போய்ச்சேர்ந்துள்ளார்.

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
**தியாகராஜ பாகவதர்**
நடித்த
**சிவகாமி**

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
ரவிச்சந்திரன் - வாணிஸ்ரீ
நடித்த
**தங்கத் தம்பி**

**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி
நடித்த
**முத்துமண்டபம்**

REGAL JAFFNA

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இஸ்ரேல்-அரபு யுத்தத்தின்போது இஸ்ரேலியருக்கு அமெரிக்க, பிரிட்டிஷ் போர் விமானங்கள் உதவிசெய்தன என்ற ஐக்கிய அரபுக் குடியரசின் குற்றச்சாட்டை அமெரிக்காவும் பிரிட்டனும் நிராகரித்தன.

கக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியிருப்பது மட்டுமல்லாமல், ''இஸ்ரேலை ஆக்கிரமிப்பு நாடு'' எனக் கண்டித்து ஆக்கிரமிப்புச்செய்த அரபு நாடுகளின் பகுதிகளிலிருந்து இஸ்ரேலியப் படைகள்விலக்கப்படவேண்

யாது.

கொஸிஜின் பேசிய பின் இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் சோவியத் யூனியனைக் கண்டித்துப் பேசுகையில் கொஸிஜினும்குரோமிக்கோவும் வெளி நடப்புச் செய்திருக்கின்றனர். இது

கின்றன. இவற்றில் மேற்கத்திய கப்பல்களே அதிகம். மேற்கு ஆசியாவிலிருந்தே பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு எண்ணெய் செல்லவேண்டும். சூயஸ்கால்வாயை நாஸர் போக்குவரத்துக்குத் தடை

களுக்கு ஆயுதங்களை விநியோகிப்பது விற்பனைசெய்வதும் தடைசெய்யப்படவேண்டுமென்பதாகும்.

இஸ்ரேல்—அரபு யுத்தத்தின்போது இஸ்ரேலியருக்கு அமெரிக்க-பிரிட்டிஷ் போர்

ருப்பதால் அமெரிக்க அதிபர் ஜோன்ஸனும் கொஸிஜினும் சந்தித்துப் பேசக்கூடிய ஒரு உச்சிமகாநாட்டை நடத்த அமெரிக்கா திட்டமிட்டிருக்கிறது. ''நான் ஐ. நா. மகாசபைக்கூட்டத்தில் கலந்துகொள்ளவே வந்திருக்கி

யாடியது வேடிக்கையாகவும், வேதனையாகவும் பெரியவர்களுக்கேற்ற பண்புள்ள செயலாக அல்லாததாகவும் தோன்றியது. எனினும் சிலருடன் சிலர் இப்படித்தான் நடந்துகொள்ளவேண்டுமென்பதையும் இச்சம்பவம் எடுத்துக்காட்டியிருக்கிறது. இந்த ராஜதந்திர நெருக்கடி எல்லையில் வெடிச்சத்தம் ஏற்படுவதற்கு அறிகுறியா?


நடித்த

முத்துமண்டபம்



**REGAL - JAFFNA**

Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.

Elvis Presley & Shelley Fabares in

CALIFORNIA HOLIDAY


# எங்கள் “அரியம்ஜீ” அமரரானார்

— சி. க. வேலாயுதபிள்ளை, காந்தி நிலையம், உருத்திரபுரம் —

யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. ஈ. டபிள்யூ. அரியநாயகம் அவர்கள் பாரதநாட்டுக்குப் படிக்கச் சென்று, கல்கத்தாவிலுள்ள சாந்திநிகேதனத்தில் கவியரசர் ரவீந்திரநாத்தாகூர் அவர்களின் பேரன்புக்குப் பாத்திரமானார். பாரதப் பண்பாடுகளும், கலைத்துறைகளும் திரு. அரியநாயகம் அவர்களுடைய உள்ளத்தை நிரப்பியது. தியாக சிந்தையும், தேசிய உணர்ச்சிகளும் அவரை ஆட்கொண்டன. அவர் பாரதநாட்டின் சேவகரேயாகிவிட்டார்.

மகாத்மா காந்தியடிகள் கவியரசர் குருதேவரைச் சந்தித்தபோது கல்வி பற்றி தமது கருத்துக்களைக் கூறி, இக்கருத்தைகட்டிவளர்க்கக் கூடிய ஒரு சேவகரை சாந்திநிகேதனம் தரவேண்டும் என்றார். குருதேவர் திரு. அரியநாயகம் அவர்களையே ஒப்புவித்தார். அந்தக்காலம் தொடக்கம் திரு. அரியநாயகம் அவர்கள் மகாத்மா காந்தியடிகளின் தத்துவ ஞானத்தின் சேவகராய் வார்தாவிலுள்ள சேவாக் கிராமத்தில் ஊழியர்களில் ஒருவரானார்.

இப்போது பாரதநாட்டின் ஜனாதிபதியாகத் திகழும் டாக்டர் ஸாகீர் ஹுசேன்ஜீ காந்தியடிகளின் கருத்துக்களைக்கொண்ட வார்தா கல்வித்திட்டத்தை—ஆதாரக்கல்வித்திட்டத்தை அமைத்தார்கள்.

அதில் திரு. அரியநாயகம் அவர்கள் செய்தபணிபாரத நாட்டின் மூலை முடக்குகள் எல்லாம் ‘அரியம் ஜீ’ என்னும் செல்லப் பெயரால் அவர்களை அறியச்செய்தது. ஆரம்பத்தில் அகில இந்திய ஆதாரக் கல்வி சங்கத்தின் செயலாளராக இருந்துபணியாற்றிய திரு. அரியநாயகம் அவர்கள் காந்தியடிகளுடைய மறைவுக்குப்பின் அச்சங்கத்தின் தலைவரானார்

பாரத நாட்டில் சர்வோதய இயக்கத்தின் அமைப்பிலும் வளர்ச்சியிலும் மிகச் சிறந்த பணியாற்றிய திரு. அரியம்ஜீ திரு. ஆசார்ய வினோபாஜியினுடைய பேரன்புக்கும் பாத்திரமானார்கள். பாரதநாட்டில் கல்வி சம்பந்தமான பல மகாநாடுகளுக்குத் தலைமை தாங்கி வழி நடாத்தினார்கள். ருஷ்யா, ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகள் முதலிய பல இடங்களுக்குப் பாரதநாட்டின் பிரதிநிதியாகச் சென்று, கல்வி, கலாசாரத்துறைகளிலும், உலக சமாதான இயக்கத்திலும் பணியாற்றினார்கள். அரியம்ஜீ தமது வாழ்க்கையை உலக சேவைக்காக—சர்வோதய இயக்கத்துக்காக அற்பணித்ததியாகசீலர் இவர்.

இலங்கையில் பிறந்த அரியம்ஜீ பாரதநாட்டில் வங்காளத்தைச் சேர்ந்த திருமதி ஆஷாதேவி அவர்களைத் திருமணம் செய்தார்கள். இவருக்கு ஒரு மகளும் உண்டு. திருமதி ஆஷாதேவி அம்மையார் அரியம்ஜீயுடன் பல நாடுகளுக்கும் சென்று சர்வோதய இயக்கத்தை வளர்த்துவந்தார்கள். அரியம்ஜீயுடன் இலங்கைக்கும் பல முறைகளில் வந்து சென்றிருக்கிறார்கள். தம்பதிகளாகவே இவர்கள் காந்திய—சர்வோதய நெறி முறைகளுக்குத் தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்திருக்கின்றார்கள். இருவரும் குருதேவரின் மாணவர்கள். மகாத்மாஜீயின் சுவீகாரபுத்திரர்கள்.

அரியம்ஜீ அகில இலங்கை காந்திய சேவா சங்கம் அமைக்கப்பட்ட காலம் தொடக்கம் இச்சங்கத்தின் வளர்ச்சியிலும், பணிகளிலும் மிகுந்த கவனமெடுத்து வந்தார்கள். உருத்திரபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள காந்திநிலையத்துக்கு 1956-ல் அத்திபாரமிட்டு ‘காந்தி நிலையம்’ என்றே பெயரும் சூட்டினார்கள். இந்த காந்தி நிலையம் அரியம்ஜீயினுடைய கனவுப்படி எதிர்காலத்தில் இலங்கையில் ஒரு கிராமிய சர்வகலாசாலையாக அமையக்கூடிய முறையில் வளர்ந்துவருகின்றது.

திரு. அரியநாயகம் அவர்கள் அடியேனிடம் காந்தி நிலையத்தின் வளர்ச்சிபற்றி சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம் விசாரித்து ஆலோசனைகள் கூறுவார்கள். காந்திசேவாசங்கத்தை கிளைகள் பல அமைத்து உண்மையான இலட்சியத்தை நோக்கி வளர்க்க வேண்டும் என்று கூறினார்கள். இலங்கையில் குறுகிய பிற்போக்கான சாதி-இன-மதமொழிபேதங்களைத் தகர்த்தெறியும் பணிகளில் சங்கம் ஈடுபடவேண்டும். சிறந்த தேசிய நோக்கை வளர்க்கவேண்டும். குறுகிய உணர்ச்சிகளுக்கு இடமளிக்கக்கூடாது என்றெல்லாம் சிறந்த புத்திமதிகளைக் கூறினார்கள். கடைசியாக சில வருடங்களுக்கு முன் திரு. அரியநாயகம் அவர்களையும் ஸ்ரீமதி ஆஷாதேவி அவர்களையும் வட்டுக்கோட்டையில் சந்தித்தபோது ‘‘இலங்கையில் கிராமிய சர்வகலாசாலை ஒன்றை அமைக்கும் பணியை நோக்கிக் காந்தி சேவா சங்கம் வேலைசெய்ய வேண்டுமென்றும் அரியம் ஜீ ஆலோசனை கூறினார்கள். திரு. ஆஷாதேவி அவர்கள் சாந்திசேனை அமைத்து தமிழர்—சிங்களவர் உறவுக்கு சங்கம் பாடுபடவேண்டும் என்று ஆலோசனை கூறினார்கள்.

காசியில் நடந்த சர்வோதய சம்மேளனத்துக்கு அடியேன் சென்றபோது பிரதான சர்வோதய தலைவர்களிடம் கூட்டிச்சென்று அடியேனை அறிமுகம்செய்து வைத்து ஆசீர்வதித்தார்கள். பிரதானமாக வினோபாஜீ, சங்கர்ராவ்தேவ்ஜீ, ஜெயப்பிரகாஸ்ஜீ, காகாகலேல்கார், வல்லஸ்வாமி, கோபந்து சௌத்திரி, டாக்டர் சுசிலாநாயர், ஆசார்ய கிருபாளிணி, சுவேதா கிருபாளிணி, இகா மேஸ்வள நேரு, மரும்தார் இப்படி பல சர்வோதய தலைவர்களையெல்லாம் அறிமுகப்பட்டு ஆசிபெறச்செய்தார்கள். இச் சந்திப்பும் பழக்கமும் நமது வாழ்க்கையில் மறக்கமுடியாதது.

பட்டம் பதவி முதலிய தராதரம் பார்த்து நடந்துகொள்ளும் வழக்கமில்லாதவர். அரியம் ஜீ அடியேனுக்கு ஒரு தந்தைபோன்றவர், நம்மை சர்வோதய நெறிமுறைகளில் வளர்த்தவர். நமக்கு வழிகாட்டியவர். எமது குறைபாடுகளை நீக்க ஆலோசனைகள் கூறி நமது சிந்தனைகளையும், உணர்ச்சிகளையும் ஒருமுகப்படுத்தி தூசி போன்ற நம்மை சர்வோதய சமுதாயத்தில் ஒரு சிறு சேவகனாக்கினார்கள். அரியம் ஜீயினுடைய மறைவு நமக்கு பேரிடி. அகில இலங்கைக் காந்திசேவா சங்கத்துக்கு பெரிய நஷ்டம். சர்வோதய சமுதாயத்துக்கு பேரிழப்பு


இப்பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம்ஆண்டு ஜூன் மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


சீரிய புலனடக்கமே மேலான நாகரீகம்.
—கீதை விளக்கத்தில் சுவாமி சித்பவானந்தர்

# நாடற்றவர் பிரச்னை முற்றாக நீங்கிவிடுமா?

இலங்கை—இந்திய ஒப்பந்த [அமுல்] மசோதா பார்லிமெண்டின் இரு சபைகளிலும் நிறைவேறி கவர்னர் ஜெனரலின் அங்கீகாரத்தையும் பெற்றுச் சட்டமாகிவிட்டது. இனி இச்சட்டம் செயல்படுத்தப்படவேண்டும். அதாவது இச் சட்டத்தின்கீழ் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரில் ஐந்தேகால் லட்சம் பேர் இந்தியப் பிரஜாவுரிமை பெற்று இந்தியாவுக்குச் செல்லவேண்டும். மற்றும் மூன்று லட்சம் பேர் இலங்கைப் பிரஜாவுரிமை பெற்று இலங்கைப் பிரஜைகளாகவேண்டும். இலங்கையிலுள்ள இந்திய வம்சா

## வாரசாரம்

வழியினர்தொகை9,75,000 பேர்தான் என்ற கணிப்புப்படி இலங்கைப் பிரஜாவுரிமையும் இந்தியப் பிரஜாவுரிமையும் இவர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டால் மிகுதியாகவுள்ள ஒன்றரை லட்சம் பேர் பற்றிப் பின்னர் இரு அரசாங்கங்களும் தீர்மானிக்கும். ஐந்தேகால் லட்சம்பேர் இந்தியப் பிரஜாவுரிமை பெற்று இந்தியா செல்வதும் மூன்று லட்சம் பேர் இலங்கைப் பிரஜாவுரிமை பெறுவதும் பதினைந்து வருடங்களுக்குள் முடிவடைந்துவிடுமென்று இலங்கையும் இந்தியாவும் ஒப்புக்கொண்டுள்ளன. பதினைந்து வருடங்களின் பின் மிகுதி ஒன்றரை லட்சம் பேர் பற்றியும் தீர்மானிக்கப்படுமானால் பதினைந்து வருடங்களின் பின்னரும் ஒன்றரை லட்சம், ஒன்றரை லட்சமாகத்தானிருக்குமா? இந்த ஒன்றரைலட்சமும் ‘நாடற்ற நிலையில்தான் இருக்கவேண்டும். எனவே நாடற்றவர் பிரச்னை முற்றாக நீங்கிவிடுமென எதிர்பார்க்கமுடியாது

இந்த ஒப்பந்தப்படி இந்தியா செல்லவேண்டிய ஐந்தேகால் லட்சம் பேரையும் கட்டாயமாக நாடுகடத்தவேண்டுமென்பது ஒரு சாரார் கோரிக்கை. கட்டாய நாடுகடத்தலுக்கு இடமிருக்கமாட்டாதென்றும் ஐந்தேகால் லட்சத்துக்குமதிகமாகவே விரும்பிச் சென்றுவிடுவார்களென்றும் கூறப்பட்டது. இங்கிருந்து சென்றுவிடுவதற்குப் பலர் விருப்பம்கொண்டிருந்தனரென்பது உண்மையே. தோட்டப் பகுதிகளில் இந்திய வம்சாவழியினருக்கு வேலை கொடுப்பதிலுள்ள கெடுபிடிச் சட்டங்களும் நிர்வாகரீதியான இடையூறுகளும் தோட்டப்பகுதிகளில் இந்திய வம்சாவழி மக்களின் வாழ்க்கைநிலை, கல்வி, குடியிருப்பு, உணவு, உடை ஆகிய பாகுபாடுகளும் அவர்கள் இங்கிருந்துசெல்வதற்கு விருப்பம் கொள்ளக் காரணமாக இருந்தன.

ஆனல் இன்று இந்தியாவில் நிலவும் உணவுக்கஷ்டம் மற்றும் பொருளாதாரக் கஷ்டங்கள் இப்போது அவர்கள் மனதை ஓரளவு மாற்றியிருக்கிறதெனக் கூறலாம் இங்குள்ளகஷ்டமாவது பரவாயில்லை, இங்கு இத்தனை வருடம்வாழ்ந்துவிட்டு அங்குபோய் இனி என்ன செய்வது என்று அவர்கள் நினைக்கலாம்.

இதனால்தான் இந்த ஒப்பந்தம்கைச்சாத்தாகிஇரண்டரை வருடங்களாகியும் இந்த மசோதா கொண்டு

## அரசியல் நிருபர்

வரப்பட்டு இத்தனை நாட்களாகியும் இந்தியப் பிரஜாவுரிமை கோரி மனுச்செய்தோர்கொஞ்சம்கூடஇல்லை.


இலங்கையிலிருந்துசெல்பவர்களுக்கு இலங்கை அரசாங்கம் போதிய வசதி செய்து கொடுக்கவேண்டும் அதே சமயம் இந்தியா போய்ச்சேருவோருக்கு இந்திய அரசாங்கம் நல்ல வசதிகளைச் செய் கொடுக்கவேண்டும்.


2-வது வெற்றி வாரம்

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] ஈரோஸ் [பாம்பன்கடை]
தினசரி பி. ப. 2, மாலை 6-00, இரவு 9-30 மணிவரை
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] மொடேர்ன் [பதுளை]
மொடேர்ன் [பண்டாரவளை] விஜிதா [ஹட்டன்] தீவொளி [நுவரெலியா]
கல்யாணி [நாவலப்பிட்டி]
ஆகிய திரைகளில்

தென்னக திரைப்பட வரலாற்றின் மகத்தான வெற்றிச் சித்திரம் ... இது மக்களின் ஒருமித்த தீர்ப்பு!
தாய்க்குலத்தின் இதயத்தைத் தொட்டுவிட்ட தன்னிகரற்ற செல்வம்!!
பத்மஸ்ரீ சிவாஜி கணேசனை சென்ற ஆண்டின் சிறந்த நடிகராக்கியது செல்வம்!!!

நடிக மன்னன் சிவாஜி கணேசன்,
நடிக ராணி கே. ஆர். விஜயா,
ரங்கராவ், சகஸ்ரநாமம், வி. நாகையா, நாகேஷ்



வி. கே. ஆர். பிக்சர்சின்

செல்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org